நகர் சபை, யாழ்ப்பாண

பக்கங்கள் : பத்து

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 வைகாசி 27 திங்கட்கிழமை (09.06.2008)UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 195

# துணை இராணுவக் குழுக்களை அரசாங்கம் கலைக்கமாட்டாது!

## புலிகள் ஆயுதங்களைக் களைந்தால் மட்டுமே அது சாத்தியம் என்கின்றார் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் ரஜீவ

கொழும்பு, ஜூன் 09



**அரசாங்கத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களை அர சாங்கம் கலைக்கமாட்டாது. அதனைச் செய்து துணை இராணுவக் குழுக்களில் இருப்போரை விடுதலைப்புலிகள் அழித்தொழிப்பதற்கு அனுமதிக்க முடியாது.**

**துணை இராணுவக் குழுக்களை நிராயுதபாணிகளாக்குவதாயின் விடு தலைப்புலிகளும் ஆயுதங்களைக் கைவிட வேண்டும்.**

**- இவ்வாறு அரசு சார்பில் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.**

மனித உரிமைகள் அமைச்சின் புதிய செயலாளர் பேராசிரியர் ரஜீவ விஜேசிங்கா, அரசாங்கத்தின் நிலைப்பாட்டை இவ்வாறு வெளிப்படுத்தி உள்ளார்.

பிரதான மதங்களின் உயா் ஆன்மீகத் தலைவர்களின் ஒன்றியம் அண்மையில் விடுத்த வேண்டுகோளுக்கு பதிலளிக்கும் வகையிலேயே மனித உரிமைகள் அமைச்சின் புதிய செயலாளரின் கருத்து பாதுகாப்பு அமைச்சின் இணையத் தளத்தில் பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

ஆன்மீகத் தலைவர்களின் ஒன்றியம் அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் விடுத்த வேண்டுகோளில்-

சகல வகையான வன் செயல்களையும் நிறுத்தி, போரை முடிவுக்கு கொண்டுவந்து, பேச்சு வார்த்தைகளை மீளத் தொடங்கி இனப்

(10ஆம் பக்கம் பார்க்க)

## கட்டுபெத்தவில் நேற்று பொதுமக்கள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஜூன் 09

மொறட்டுவ, கட்டுபெத்த பகுதியில் இடம்பெற்ற பஸ் மீதான கிளைமோர்த் தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்று அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை அங்கு நடத்தினர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கட்டுபெத்த சைலம்பி எம்பரிய விகாரை முன்பாகத் திரண்ட மக்கள், பொதுமக்கள் மீதான இவ்வாறான தாக்குதலைக் கண்டித்து எதிர்ப்புக் கோஷங்களை எழுப்பி இந்த ஆர்ப்பாட்டத்தை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆர்ப்பாட்டம் காரணமாக எதுவிதமான வன்முறைச் சம்பவங்களும் இடம்பெறவில்லை எனவும் இந்த ஆர்ப்பாட்டம் மிக ஒழுங்கான முறையில் மேற்கொள்ளப்பட்டது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பதுளையில் ஆயுதங்கள் மீட்பு

பதுளை, ஜூன் 09

பதுளையைச் சேர்ந்த கல்கத்த பகுதியிலுள்ள வீடொன்றிலிருந்து துப்பாக்கி உட்பட வெடி பொருள்கள் பலவற்றையும், பதுளைப் பொலிஸார் கடந்த சனியன்று கைப்பற்றியுள்ளதுடன், சந்தேகத் தின் பேரில் வீட்டுரிமையாளரையும் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பதுளைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சுனில் மதுரட்டவிற்கு கிடைத்த தகவலொன்றையடுத்து, பதுளைப் பொலிஸ் குழுவொன்று இந்த வீட்டைச் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தி இவற்றைக் கைப்பற்றியது.

## வடக்கையும் கிழக்கையும் தமிழர்களிடம் ஒப்படையுங்கள்; தெற்குப் பயணம் அவசியமிராது

### சாடுகிறார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

கொழும்பு, ஜூன் 09

வடக்கையும் கிழக்கையும் தமிழர்களிடம் ஒப்படையுங்கள். வடபகுதி மக்கள் தெற்கே வரவேண்டிய அவசியமிருக்காது.

வடக்கு, கிழக்கில் குவித்து வைத்திருக்கும் படையினரை விலக்கிவிட்டு தமிழர்களிடம் ஒப்படையுங்கள்.

வடபகுதி மக்கள் தென்னிலங்கை செல்வதற்கு அரசு மதவாச்சியில் தடைவிதித்திருப்பது குறித்துக் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பி. சுரேஷ் பிரேமச்சந்திரன் இவ்வாறு சாடினார்.

தமிழ் மக்கள் மீதான பேரினவாத அரசாங்கத்தின் கெடுபிடிகள் நீடித்துச் செல்கின்றன. வடக்கிலிருந்து தமிழர்களின் தெற்குப் பயணத்தை அரசாங்கமும் பாதுகாப்பு அமைச்சும் முடக்கி வருகின்றன.

தமிழ் மக்கள் தென்பகுதிக்கு வரக்கூடாது என்பதில் முனைப்புக் காட்டுகின்ற அரசாங்கம் வடக்குக் கிழக்கில் குவித்து வைத்திருக்கும் படையினரை விலக்கிக் கொள்ளவேண்டும். வடக்கையும் கிழக்கையும் தமிழ் மக்களி

(10ஆம் பக்கம் பார்க்க)

## வெலி ஓயாவில் நேற்று இரவு முழுவதும் கடும் மோதல்கள் தொடர்ந்தன

### படைத்தரப்பு அறிவிப்பு

கொழும்பு,ஜூன் 08

வெலிஓயாவுக்கு சமீபமாக ஜனகபுர, கிரி யப்பன்வெவ ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் முன்னரங்குகளை நோக்கி, நேற்று முன்னேறிய படையினருக்கு விடு தலைப்புலிகளுக்கும் இடையில் நேற்று நள்ளிரவிலும் தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்று வருவதாக பாதுகாப்பு வட்டாரங்கள் அறிவித்தன.

நேற்றுக்காலை முன்னேறிய படையினர் விடுதலைப் புலிகளின் கேந்திர முக்கியத் து

(10ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை ஊடகவியலாளர்களுக்காக லண்டனில் இன்று பிரார்த்தனை

### சர்வதேச மன்னிப்புச் சபையின் ஏற்பாட்டில்

கொழும்பு, ஜூன் 09

இலங்கையில் படுகொலை செய்யப்பட்ட மற்றும் அச்சுறுத்தலுக்குள்ளாகியுள்ள ஊடகவியலாளர்களுக்காக சர்வதேச மன்னிப்புச்சபை லண்டனில் உள்ள பொதுநலவாய செயலக கட்டடம் முன்பாக இன்று திங்கட்கிழமை பிரார்த்தனை நிகழ்வொன்றை ஏற்பாடு செய்துள்ளது.

பொதுநலவாய நாடுகளின் தலைவர்களின்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஆசிரியர்கள் சுகவீன விடுமுறைப் போராட்டம்!

கொழும்பு, ஜூன் 09

ஆசிரியர்களுக்கான சம்பள முரண்பாட்டைத் தீர்க்கக்கோரி ஆசிரியர்கள் நாளை மறுதினம் புதன்கிழமை 11ஆம் திகதியும் மறுநாள் வியாழக்கிழமை 12ஆம் திகதியும் நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபடத்தீர்மானித்துள்ளனர்.

இது தொடர்பாக ஆசிரியர் தொழிற்சங்க முக்கியஸ்தர் மஹிந்த ஜயசிங்க கூறியவை வருமாறு:-

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## மொறட்டுவ பல்கலைக்கழக விரிவுரைகள் இன்று ஆரம்பம்

### ஆனால் தமிழ் மாணவர்கள் செல்லமாட்டார்கள்

கொழும்பு, ஜூன் 09

மொறட்டுவ, கட்டுப்பெத்த பகுதியில் இடம்பெற்ற குண்டு வெடிப்பையடுத்து தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்த மொறட்டுவ பல்கலைக்கழக மாணவர்களின் விரிவுரைகள் இன்று மீண்டும் ஆரம்பமாகின்றன. எனினும் இதில் தமிழ் மாணவர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சம்பவத்தை அடுத்து பல்கலை வளாகத்துக்குள் தற்போது தமிழ் மாணவர்கள் போக முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. சிங்கள மாணவர்கள் வழமைபோல் தமது செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர் என அறிய முடிகிறது. இதனால் சிங்கள மாணவர்கள் இன்று மீண்டும் ஆரம்பமாகும் விரிவுரைகளில் வழமைபோல் கலந்து கொள்வார்கள் என்றும் விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

தமிழ் மாணவர்களின் பாதுகாப்பைக் கருத்

(10ஆம் பக்கம் பார்க்க)

## ஐரோப்பிய ஒன்றியத் தூதர்கள் மூவர் அடுத்த வாரம் இலங்கை வருகின்றனர்

### அதன் பின்பே ஜி.எஸ்.பி. வரிச்சலுகை குறித்த இறுதி முடிவு

கொழும்பு, ஜூன் 09

இலங்கையின் மனித உரிமை நிலைவரம் மற்றும் மனித உரிமை உட்கட்டமைப்பு ஆகியவை குறித்து நேரில் அறிந்து கொள்வதற்கென ஐரோப்பிய ஒன்றியத்தின் மூன்று தூதர்கள் கூட்டாக இலங்கைக்கு அடுத்த வாரம் விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை குறித்து சர்ச்சை உருவாகியுள்ள இன்றைய நிலையில், இவர்களது விஜயம் முக்கியம் வாய்ந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நெதர்லாந்து, சுவீடன், ஸ்பெயின் ஆகிய நாடுகளைச் சேர்ந்த மூன்று மனித உரிமைத்

(10ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# முதலாம் தரத்துக்கு அடுத்த வருடம் முதல் நேர்முகப்பரீட்சை இன்றி மாணவர் தெரிவு

கொழும்பு, ஜூன் 09

முதலாம்தரத்துக்கு மாணவர்களைச் சேர்க்கும் விடயத்தில் அடுத்த வருடம் முதல் நேர்முகப் பரீட்சைகளை நடத்துவதில்லையென கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

முதலாம்தரத்தக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்வது தொடர்பான புதிய சுற்றறிக்கை ஒன்றை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அதன்படி அடுத்த வருடத்துக்கு முதலாம் தரத்துக்கு மாண வர் களை சேர்த்தக் கொள்வதற்க்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்பட்டு வருகின்றன.

ஒரு பாடசாலைக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரி தாம் விரும்பும் மேலும் பல பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க லாம் என முன்னர் கல்வி அமைச்சு தெரிவித்திருந்தது.

குறைந்த பட்சம் மூன்று மாகாணப் பாடசாலைகள் உட்பட அறு பாடசாலைகளுக்கு விண்ணப்பிக்க புதிய சுற்றறிக்கை மூலம் வழிவகுக்கப்பட்டுள்ளது. இப்புதிய சலுகை மூலம் ஏற்படும் சிக்கல் நிலையை நீக்க கல்வி அமைச்சு இன்னொரு திட்டம் ஒன்றை வகுத்துள்ளது.

இவ்வாறு ஒரே மாணவர் பல பாடசாலை களுக்கு விண்ணப்பிப்பதன் மூலம் அவர் பல பாடசாலைகளுக்கும் தெரிவானால் அதன் மூலம் ஏனைய மாணவர்கள் வாய்ப்பை இழக்க நேரிடும்.

அதனால் குறிப்பிட்ட மாணவர் தெரிவாகி உள்ள பாடசாலைப் பட்டியலில் அந்த மாண வரின் வசிப்பிடத்துக்கு மிகவும் அண் மித்த பாடசாலையை மட்டும் பட்டியலில் விட்டு ஏனைய பாடசாலைகளை நீக்க அமைச்சு முடிவு செய்துள்ளது.

இதற்காக பாடசாலையின் மாணவர் கள் தெரிவுக் குழுவின் தலைவர்களைக் கொண்ட குழு ஒன்றை கல்வி அமைச்சு நியமித்துள்ளது.

முதலாம் தரத்துக்கு மாணவர்களை சேர்த்துக் கொள்ளும் விடயத்தில் கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட பல நடவ டிக்கைகள் இம்முறை நீக்கப்பட்டுள்ளன. அதன்படி இம்முறை மாணவர்கள் தொடர் பான நேர்முகப் பரீட்சைகள் நடத்தப்பட மாட்டா.

புதிய மாற்றத்தின்படி ஆறு அடிப்ப டையில் புள்ளிகள் வழங்கப்பட்டு மாண வர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

## மரண அறிவித்தல்கள்

### வைத்திலிங்கம் மணியம்



கோப்பாய் பழைய வீதியைப் பிறப்பிடமாகவும் பம்பைமடு, வவுனியாவை வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் மணியம் 05.06.2008 வியாழக்கிழமை வவுனியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைத்தி லிங்கம் - தங்கம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நாகமுத்து - பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமக னும் காலஞ்சென்ற செல்லம்மாவின் அன்புக் கணவரும், காலஞ் சென்ற நாகம்மாவின் சகோதரனும், அமரர் ஸ்ரீபாலகிருஸ்ணன் மற்றும் சிறிமோகநாதன், சிறிரங்கநாதன்(Elephant House), சிறிவிஜயநாதன் (உதயன் நாளிதழ்), அமரர் சிறிசிவநாதன் மற்றும் சிறிவைரவநாதன், அற்புதராணி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் மலர், யோகேஸ்வரி, சுகந்தி, மாலா, குகா, சோழ ஆகியோரின் மாமனாரும் உமேஷ், கயானி, உசா, திலக்ஷன், நிருஷன், அம்சாயினி, விதுஷன், மதுசன், யதுஷன், லதுசன், சாருஜன், வைஷ்ணன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக் கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*பழைய வீதி,*
*கோப்பாய் தெற்கு,*
*கோப்பாய்.*

தகவல்:
ம.சிறிவிஜயநாதன்
(மகன்)

### கணேசன் இலங்கை நேசன் [மோகன்]



புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தை பிறப்பி டமாகக் கொண்டவரும் கனடாவில் வசிப்பவ ருமான கணேசன் இலங்கை நேசன் (07.06.2008) சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபாபதி கணேசன் - மற்றும் கமலாம்பிகை தம்பதியினரின் அருமை மகனும், லலிதாம்பிகை(லதா- கனடா), மங்கையர்க்கரசி(திருகோணமலை), கலைச் செல்வி(ஆசிரியை, யா/ஆனைப்பந்தி மெதடிஸ் மிசன் வித்தியாலயம்), கமலநேசன்(சுவிஸ்), குகப்பிரியா(சுவிஸ்), தவநேசன்(செல்லா-கொழும்பு), சிவநேசன்(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவசுப்பிரமணியம்(கனடா), கந்தசாமி(திருகோணமலை), விக்னேஸ்வரன்(நாரந்தனை), நந்தினி(சுவிஸ்), சுரேஸ்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 12.06.2008 வியாழக்கிழமை காலை 10மணிக்கு கனடாவில் நடைபெறும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

Mrs.S.Latha,
4100 Lawrence
-Axeeastapt 608,
Scanboroughent,
Miezrq,
Canada. T.P:14164187658

தகவல்:
கலைச்செல்வி-விக்னேஸ்வரன்
(சகோதரி)
70/1, வைமன் வீதி,
நல்லூர்,யாழ்ப்பாணம்.
T.P:0776513769

## நெஞ்சை விட்டு அகலா பத்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 17 . 05 . 1954



உதிர்வு 31 . 05 . 1998

### அமரர் காளிமுத்து தங்கவேல்

[திதி: ஷஷ்டி 09.06.2008]

எம் உயிரோடு கலந்து விட்ட உறவே
ஆண்டுகள் பத்தும்
பத்து வினாடிபோல் ஓடிற்று - அப்பா
காயங்கள் ஆறிய பிறகும்
தழும்புகள் வலிக்கிறது
ஒத்தடம் கொடுக்க எத்தனித்த உதடுகளில்
ஏக்கம் கசிகிறது
நெஞ்சத்தில் பேரிடியை தந்து விட்டு
நீங்கள் மட்டும் நெடுந்தொலைவில் - அப்பா
நாம் மட்டும் இங்கே வேதனைத் தீயில்

ஞா.பா.ச.வீதி,
வீரபத்திரர் கோவில் வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (75220)

உங்கள் பிரிவால் துயர் உற்றிருக்கும்
மனைவி,பிள்ளைகள்,
மருமகன், பேரர்கள்

## லண்டனில் ஜனாதிபதி

கொழும்பு, ஜூன் 09

உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுமுற்பகல் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ லண்டன் பயண மானார்.

லண்டன், பொதுநலவாய செயலகத் தில் இன்று ஆரம்பமாகும் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதி பதி இந்த விஜயத்தை மேற்கொண்டுள் ளார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித் திருக்கிறது.

இன்றும், நாளையும் இரு தினங்களாக இடம்பெறும் இந்த மாநாட்டில் பொதுநல வாய நாடுகளின் தலைவர்கள் பலரும் கலந் துகொள்வார்கள் என்றும் ஜனாதிபதி செய லகம் குறிப்பிட்டிருக்கிறது. (சி)

## மன்னாரில் ஹெலியால் பதற்றம்

கொழும்பு, ஜூன் 09

மன்னார் கடற்கரையை அண்டிய பகுதிகளில் நேற்று முன்தினம் காலை முதல் இரவு வரை மர்மமான முறையில் ஹெலிக்கொப்டர் ஒன்று வட்டமிட்டுத் திரிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் அப்பகுதிகளில் வாழும் மக்கள் பதற்றமடைந்து காணப்பட்டனர் என்றும் பின்னர் அந்த ஹெலிக்கொப்டர் திடீரென மறைந்துவிட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.(சி)

## இன்றைய ஆட்டங்கள்

மந்திகை, ஜூன் 09

மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15வது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி நடத்தப்பட்டுவரும் மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பி.ப 3மணிக்கு வல் வெட்டித்துறை ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து பருத்தித்துறை விவே கானந்தா விளையாட்டுக் கழகமும் நாளை பி.ப 3மணிக்கு புலோலி குரும்கலட்டி உதயசூரியன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மாலிசந்தி ஸ்ரீமுருகன்விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன. 1-218)

## செயலகத்தில் மீளாய்வுக் கூட்டம்

குருநகர், ஜூன் 09

யாழ்.மாவட்ட அத்தியாவசிய சேவைகள் மீளாய்வு குழுவின் கூட்டம் நாளை செவ் வாய்க்கிழமை முற்பகல் 9மணிக்கு யாழ். மாவட்ட செயலக யாழ் அரச அதிபர் அலு வலகத்தில் யாழ் அரச அதிபர் க.கணேஸ் தலைமையில் நடைபெற உள்ளது. (01-51)


### தேவை

புறொயிலர் Kg 400/=கும் கல்பேட் Kg 360/=கும் ஊர்ச்சேவல் Kg 450/=கும் கொள்வனவு செய்யப் படும்.

தாசன் பாம்,
158/4, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.

### வீட்டுடன் காணி விற்பனைக்கு

கீழ்வரும் விலாசத்தில் சகல வசதிகளும் கொண்ட 04 பரப்பு காணி வீட்டுடன் விற்ப னைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
ஐ.கனகலிங்கம்,
[illegible]/7, [illegible] வீதி,
[illegible]


## தமிழ் மொழித் திறன் போட்டி

பருத்தித்துறை கோட்டமட்ட தமிழ் மொழித்திறன் போட்டி எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் கோட்டக் கல்வி அதிகாரி பா.இரகுநாதன் தலைமை யில் நடைபெறவுள்ளது. இப்போட்டிக்கு வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராசா பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

## 31ம் நாள் நினைவஞ்சலி

அமரர் எலிசபேத் நேசம்மா செல்லத்துரை

மலர்வு 15 - 04 - 1923



உதிர்வு 09 - 05 - 2008

அன்புக்கும் கருணைக்கும்
உறைவிடமான தாயே!
உங்கள் நினைவுகள் எங்கள்
நெஞ்சைவிட்டு எத்தனை
ஆண்டுகளானாலும் நீங்காது.

உங்கள் இளைப்பாறுதலுக்காக
பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள் மருமக்கள்
பேரப்பிள்ளைகள்
பூட்டப்பிள்ளைகள்

இல 19, கொழும்புத்துறை வீதி கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்கள்

### சுந்தரம் தியாகராசா

[இளைப்பாறிய உத்தியோகத்தர், புகையிரத இலாகா ]



இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும், வசிப் பிடமாகவும் கொண்ட சுந்தரம் தியாகராசா (இளைப் பாறிய உத்தியோகத்தர், புகையிரத இலாகா ) நேற்று (08.06.2008) காலை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுந்தரம் - பரம நாயகி தம்பதியரின் ஏகபுதல்வனும் காலஞ்சென்றவர் களான கோப்பாய் சந்தி சண்முகசுப்பிரமணியம் (சட்டத்தரணி ) - யோகாம்பிகை தம்பதியரின் மூதத மருமகனும் காலஞ்சென்ற யோகமலரின் அன்புக் கணவரும் மகேஸ்வரியின் அன்புச் சகோதரனும் இராஜயோகேந் திரராணி (கனடா), யோகீஸ்வரன் (பொறியியலாளர், ஓமான்), ஜெக தீஸ்வரன் (ஜேர்மனி), சர்வேஸ்வரம் (ஆசிரியர், யா/கைதடி விக்கி னேஸ்வரா வித்தியாலயம்), யோகவல்லி ஆகியோரின் பாசமிகு தந் தையும் தண்டிகைவிசாகேசன் (கனடா), சுதந்திராதேவி (குரூனி, ஓமான்), குமுதினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமனும் உமாராணி, உஷாராணி, ஜெயராணி, ஜீவராணி, செந்தூரன், பவித்தி ரன், காருண்யா, ஜெனனி, ஜெனகன், ஜெனுசன், ஸகந்தகுமரன், அஜந்தன், பாலேந்திரா ஆகியோரின் அன்புப் பேரனும் அபிஷா, லலுஜன், நிதுஷா ஆகியோரின் அன்புப் பூட்டனும் சோதிலிங்கம், Dr சந்திரசேகரா, காலஞ்சென்ற கதிரித்தம்பி காலஞ்சென்ற திருமதி சோதிசுந்தரம் - யோகமணி, திருமதி கந்தையா - யோகாதேவி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (09.06.2008) திங்கட் கிழமை மு.ப.10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இருபாலை கிழக்கு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*"கல்யாணி வாசா"*
*இருபாலை.*

(75221)

தகவல்:
தி.சர்வேஸ்வரன்
(மகன் - கிளி மாஸ்ரர்)

### சின்னத்தம்பி மனோகரராசா

[லொறி உரிமையாளர் 40 ஸ்ரீ 3795]



புத்தூர் வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி மனோகரராசா 07.06.2008 சனிக்கிழமை காலமா னார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி குஞ்சுப்பிள்ளை தம்பதியரின் மகனும் சரவணை -திருஞானம் தம்பதியரின் மருமகனும் சியாம ளாவின் அன்புக் கணவரும் கஜீவ்ராஜ் (சென் ஜோன்ஸ் கல்லூரி - 2008 A/L), ஜர்சன் (யா/ புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி), வினோஜன்(யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி) ஆகியோரின் தகப்பனும் செல்வராசா (மாயவன் லொறி), தயாநிதி, சிவயோகநாதன் (ஜேர்மனி), இராஜகோபால் (கனடா), வைகுந்தநாதன் ஆகியோரின் சகோதரரும் சறோஜினிதேவி, பத்மநாதன் (ஆசிரியர், யா/ அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம்), ரதி (ஜேர்மனி), பிரபாகினி (கனடா), மனோரஞ்சிதம், சர்வானந்தமூர்த்தி (இத்தாலி), அருந்ததி (டென்மார்க்), காலஞ்சென்ற சந்திரவ தனா ஆகியோரின் மைத்துனரும் சிவறூபி, சூரியகுமார், தவராசா ஆகியோரின் ஒன்று விட்ட சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09.06.2008) திங்கட் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப 10 மணியளவில் தகனக் கிரியைகளுக்காக புத்தூர் கிந்துசிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக் கொள்ளவும்.

*புத்தூர் வடக்கு,*
*புத்தூர்.*

(சி/553167)

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

### மார்க்கண்டு நல்லையா

[செல்வராசா, இளைப்பாறிய கிளை முகாமையாளர் சுன்னாகம் ப.நோ.கூ.ச]



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மார்க்கண்டு நல்லையா நேற்று(08.06.2008) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் மார்க்கண்டு- நாகமணி தம்பதியி னரின் இளைய மகனும், விசுவலிங்கம்- தங்கராசம் தம்பதியி னரின் அன்பு மருமகனும் தனலட்சுமியின் அன்புக் கணவனும் நவரத்தினம், நாகையா, யோகநாதன், செல்வராணி ஆகியோரின் அன்புச் சகோதரனும், வாலாம்பிகை, அமரர் பரம்சோதி (ஓய்வுபெற்ற பிரதி அதிபர்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (08.06.2008) ஞாயிற் றுக்கிழமை பி.ப 4மணியளவில் நடைபெற்று பூதவுடல் காரைக் கால் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*சோதி வாசம்,*
*பாற்சங்க ஒழுங்கை,*
*இணுவில் மேற்கு,*
*இணுவில்.*

தகவல்:
மனைவி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'நவாலியூரானின் கலை இலக்கியப்பணிகள்' நூல் வெளியீட்டு விழா கடந்த சனிக்கிழமை நல்லூர் புனித யாக்கோபு ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டோரை முதலாவது படத்திலும் யாழ். குரு முதல்வர் அருட்பணி எஸ். பி. நேசகுமார், இலங்கை இலக்கியப் பேரவைச் செயலாளர் சி.சிவதாசன் ஆகியோர் உரையாற்றுவதை அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம்.

யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா நூலை வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் பெற்றுக் கொள்வதை நான்காவது படத்தில் காணலாம். *(படங்கள்:லக்ஷ்மன்)*

## பொலிகண்டி மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு புதிய கட்டடம் அமைக்கப்படும்

மந்திகை, ஜூன் 9

பொலிகண்டி மேற்கு கிராமஅபிவிருத்திச் சங்கத்துக்கு ''நிக்கொட்'' நிறுவனத்தின் நிதியுதவியுடன் சுமார் 13 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடமொன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான காணியை மாதர் சங்கத்தின் தலைவி அன்பளிப்பாக வழங்கியிருக்கின்றார்.

இக்கிராம அபிவிருத்திச் சங்கத்தின் புதிய கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. யாழ்ப் பாண அரசாங்க அதிபர் கே.கணேஷ் சம்பிரதாய பூர்வமாக அடிக் கல்லை நாட்டி வைத்தார்.

இவ்விழாவிலே வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆர். வரதீஸ்வரன், யூ. என். டி. பி இணைப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (202-218)

## சர்வதேச புகைத்தல் தின கொடி தினம் 19 ஆம் திகதி வரை அனுஷ்டிப்பு

நல்லூர், ஜூன்9

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தையொட்டி கடந்த மே மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமான கொடிதினம் எதிர்வரும் 19 ஆம் திகதி வியாழக்கிழமைவரை இடம்பெறவுள்ளது.

இதன் மூலம் கிடைக்கும் நிதி வறிய விதவைகளின் பிள்ளைகளின் நலனுக்காக வழங்கப்படும் என யாழ். பிரதேச செயலக சமுர்த்தி மகா சங்கம் தெரிவித்துள்ளது.

விதவைகளுக்கு தையல், கயிறு திரிக்கும் இயந்திரங்கள் கொள்வனவுக்கென 58 ஆயிரத்து 930 ரூபாவும் வறிய மாணவர்கள் 125 பேருக்கு பாடசாலை உபகரணங்களுக்கென 12 ஆயிரத்து 830 ரூபாவும் வறிய விதவைகளுக்கு சுயதொழில் ஊக்குவிப்பு கொடுப்பனவாக 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

வறிய மாணவர்களுக்கு அந்தந்த வங்கிச் சங்கங்களில் தலா ஆயிரம் ரூபா வீதம் 125 பேருக்கு வைப்புச் செய்து ஒரு லட்சத்து 25 ஆயிரம் ரூபா தொகைக்கு சிசுரக்க சிறுவர் கணக்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. என்றும் கூறப்பட்டது. (203-111)

## புற்றளை ம.விக்கு புதிய பெயர் வளைவு

வடமராட்சி,ஜூன்9

தென் புலோலி புற்றளை மகா வித்தியாலயத்திற்கு பழைய மாணவர் மன்றத்தினரால் பெயர் வளைவு ஒன்று செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலையின் பரிசளிப்பு தின விழாவின் போது இப் பெயர்வளைவு நிறுவப்பட்டு திறந்து வைக்கப்படவுள்ளது. (203-236)

## விசேட தேவையுடைய சிறார்களை பாடசாலைகளுக்கு உள்வாங்குதல் தொடர்பாக பெற்றோருக்கு விசேட செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், ஜூன்9

விசேட தேவையுள்ள சிறார்களை பாடசாலைகளில் உள்வாங்குவது தொடர்பாக பெற்றோர் விழிப்புணர்வுச் செயற்றிட்டம் ஒன்று யாழ். மாவட்டத்தில் நடைமுறைப் படுத்தப்படுகிறது.

இதற்கான நடவடிக்கைகளை கல்வித் திணைக்களம் மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


சிறுவர் செயற்றிட்ட அடிப்படையில் இத் திட்டத்தை மேற்கொள்வதற்கான நிதி உதவிகளை வலயக்கல்வி அலுவலகங்களுக்கு மாகாண கல்வித் திணைக்களம் அனுப்பிவைத்துள்ளது.

இத் திட்டத்தின் கீழ் கருத்தரங்குகள் நடத்துதல், தெருக்கூத்துகளை ஒழுங்கு செய்தல், நாடகங்கள் நடத்துதல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலம் சிறுவர் உரிமைகள் பற்றி பெற்றோர் அறிந்து கொள்ளவும் விசேட தேவையுள்ள பிள்ளைகளை ஏனைய பிள்ளைகளைப் போல் மதிக்கவும் வழிகள் ஏற்படுத்தப்படவுள்ளன.

விசேட தேவை உடைய பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பவும் , அவர்களின் எதிர்பார்ப்புகள் தேவைகளை அறிந்து செயற்படல் போன்ற செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலம் விசேட தேவையுடைய சிறாரும் ஏனையவர்களைப் போல் சமூகத்தில் வாழ முடியும் என்று மாகாணக் கல்விப் பணிப்பாளர் வீ. இராசையா தெரிவித்துள்ளார். (203-218)




வண்ணை விசுவேச விநாயகர் ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (203)

* * *

யாழ்ப்பாணம், ஜூன்9

கைதடி, கயற்சிட்டி கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி முற்பகல் 10 மணிக்குத் தேர்த் திருவிழாவும் மறுநாள் முற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறவுள்ளன. (203)

* * *

அராலி வடக்கு, மயிலியற்புலம் கந்த சுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் வியாழக்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் இடம் பெற வுள்ளது. (203)

* * *

சரவணை, பள்ளம்புலம் முருகமூர்த்தி ஆலய பெருந்திருவிழா இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 17ஆம் திகதி தேர்த்திவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும் (203).

## வடமராட்சியில் விசேட தேவையுடைய மாணவருக்கு பாடசாலை அமைக்க வலயப் பணிப்பாளர் நடவடிக்கை

வடமராட்சி, ஜூன்9

வடமராட்சிப் பிரதேசத்தில் விசேட தேவை உள்ளோருக்கான தனியான பாடசாலை ஒன்றை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

வடமராட்சிப் பகுதியில் உள்ள விசேட தேவையுடையோர் யாழ்.நகரிலுள்ள மற்றும் வேறு இடங்களிலும் அவர்களுக்கான பாடசாலைகளுக்குச் சென்று கல்வி கற்க வேண்டியுள்ளது.

இப் பாடசாலைகளுக்கு அவர்கள் கல்வி கற்கச் செல்வதால் போக்குவரத்துச் செலவு, பிரயாண நெருக்கடி, நேர விரயம் என்பன ஏற்பட்டுள்ளதுடன் அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக பெரும் சிரமங்களை அனுபவிக்க வேண்டியுள்ளது.

இவற்றைக் கருத்தில் கொண்டு வடமராட்சிப் பிரதேசத்தில் இவர்களுக்கென தனியான பாடசாலை ஒன்றை அமைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளரிடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இதனையடுத்து, தற்போது மூடப்பட்டிருக்கும் புலோலி சூசையப்பர் றோமன் கத்தோலிக்கப் பாடசாலையில் விசேட தேவையுள்ளோருக்கென ஒரு பாடசாலையை ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயத்தில் வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா உரிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (203-236)

# மாகாணசபை முறைமை நடைமுறைப்படுத்துவதால் இந்தியாவின் பல்வேறு உதவிகளைப் பெறலாம்

## அமைச்சர் டக்ளஸ் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜூன் 9

இந்தியாவின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள மாகாணசபை முறைமை அரசியல் தலைமைகளுடன் வடக்கு - கிழக்கில் மீளச் செயற்படுத்தப்பட்டு வருவதால், இந்தியாவின் பல்வேறு உதவிகளையும் எம்மால் பெற்றுக் கொள்ளமுடியும்.

சமூக சேவைகள் மற்றும் சமூகத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவனந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அலுவலகத்துக்கு வருகை தந்த மக்கள் மத்தியில் பேசுகையில் அவர் இப்படிக் கூறினார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு மக்களின் நலன் கருதி கொண்டுவரப்பட்ட மாகாணசபை முறைமையின் பலன்களை இப்போதுதான் எம் மக்கள் உரிய முறையில் அனுபவிக்க ஆரம்பித்துள்ளனர். இதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தமிழ் பேசும் மக்கள் சார்பாக நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இலங்கை- இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் ஏற்பட்ட மாகாண சபை முறைமை இதற்கு முன் ஒழுங்கான முறையில் வடக்கு, கிழக்கில் நடைமுறைப் படுத்தப்படவில்லை. இந்த நிலையில் காலங்கடந்த தீர்வென்று கூறி இதனையும் தட்டிக் கழிப்பதற்கு தமிழ்த் தலைவர்கள் என பலவந் தமாகத் தங்களைத் தாங்களே கூறிக்கொள் பவர்கள் முன்வருகின்றனர். தற்போது தான் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் மாகாண சபை முறைமையை ஒழுங்குற நடைமுறைப் படுத்துவதற்கு ஆரம்பித்துள்ளோம்.

எமது அரசியலுரிமைப் பிரச்சினை தொடர்பில் நாம் முன்வைத்துள்ள மூன்று கட்டங்களைக் கொண்ட தீர்வுத் திட்டத்தின் முதற்கட்டம், மாகாணசபைக்கு அரசியல் தலைமைத்துவம் வழங்கி அதனைச் செயற்படுத்துவதன் மூலம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் இரண்டாம் கட்டம் மாகாண சபைக்கு கூடுதல் அதிகாரங்களை இன்றைய அரசியலமைப்பிற்கு உட்பட்ட வகையில் பெற்றுக்கொண்டு மக்களது அன்றாட மற்றும் அத்தியாவசியத் தேவைகளை கணிசமான ளவு பூர்த்தி செய்து இறுதித் தீர்வு நோக்கி அம்மக்களை முன்னகர்த்துவதற்கான சாதகமான சூழ்நிலையை உருவாக்கிக் கொள்வதாகும்.

இந்தியாவின் அனுசரணையுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள மாகாணசபை முறைமை அரசியல் தலைமைத்துவத்துடன் வடக்கு, கிழக்கில் மீள செயற்படுத்தப்பட்டு வருவதால் இந்தியாவின் பல்வேறு உதவிகளையும் எம்மால் பெற்றுக்கொள்ள இயலும்.

தமது குறுகிய சுயலாபத்திற்காக இந்தியாவைப் பகைத்துக் கொண்ட சக்திகள் இன்று இந்தியாவின் தயவை நாடி நிற்கும் துன்பியல் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். எமது பிரச்சினைக்காக நிரந்தரத் தீர்வை எட்டுவதில் இந்தியாவின் ஒத்துழைப்பு எமக்கு இன்றியமையாதது என்பதைதான் எப்போதுமே வலியுறுத்தி வந்துள்ளோம் - என்றார்.

## ஹாட்லி பழைய மாணவரின் செய்தி இதழ் வெளியீடு

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம் நான்கு மாதத்துக்கு ஒரு தடவை வெளியிட்டு வரும் செய்தி இதழின் அடுத்த வெளியீடு விரைவில் வெளியிடப்படவுள்ளது.

இவ் வெளியீட்டில் மாணவர்களின் சாதனைகள், கல்வி மேம்பாட்டுச் செயற்பாடுகள், கல்லூரியின் பௌதிகவளம் போன்ற அம்சங்கள் இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (203-236)

## முன்பள்ளி மாணவருக்கு சத்துணவு விநியோகம்

சுழிபுரம்,ஜூன்9

வலிகாமம் மேற்கு பிரதேச சபையினரால் முன்பள்ளி மாணவர்களுக்கு வழங்குவதற்கென பயறு, கடலை, அவல் போன்றன முன்பள்ளி ஆசிரியர்களிடம் வழங்கப்பட்டுள்ளன.

தினமும் இவை மாணவர்களுக்கு வழங்கப்பட்டுவருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (203-28)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் நடராஜா பத்மநாதன்

மலர்வு:19.06.1954

உதிர்வு: 10.05.2008



பாசமாய் விளங்கியவனே! பாரினில்
பல்லாண்டு வாழ்வாய்
என்று நாம் நினைக்க
பாதியில் நீ பிரிந்ததேனோ?

08ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

தகவல்:
லோகசுப்பிரமணியம் பரமேஸ்வரி (சகோதரி - அல்லி),
காரைநகர். [75201]

## மரண அறிவித்தல்

### திரவியம் ஞானப்பிரகாசம் (இராசையா)



5/10, இராசாவின் தோட்ட ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திரவியம் ஞானப்பிரகாசம் (07.06.2008) சனிக்கிழமை காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான திரவியம் - பாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அந்தோனிப்பிள்ளை - மரியம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் பிலோமினாவின் (நவம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான பிலிப், அந்தோனிப்பிள்ளை, சின்னராசா ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்றவர்களான எட்வேட்,திரேசம்மா, அல்பிறேட் மற்றும் இராஜநாயம் (பிரான்ஸ்), லில்லி, பென டிற்(பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனரும் வனிதா (கொழும்பு), ரவி (கொலன்ட்), காலஞ்சென்ற அன்ரனி பாலா மற்றும் வனஜா (பிரான்ஸ்), சாந்தன், சுரேந்திரன் (பாலா வெல்டிங் உரிமையாளர்), றஜிதா (பிரான்ஸ்), சதீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் றெஜினோல்ட் (பிரான்ஸ்), நகுலேஸ்வரி, சகாயராஜா (பிரான்ஸ்),சுகந்தி, லதா, சிறிதரன் (பிரான்ஸ்), டிலானி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனும் கெனத் (பிரான்ஸ்), வினோத் (பிரான்ஸ்), பியற்றீஸ் (பிரான்ஸ்), நந்தாஷா (பிரான்ஸ்), சஷா (பிரான்ஸ்), எனுசி, டனுசன், சறோன், சரன்னியா, ஜொறீஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (09.06.2008) திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் புனித திரேசாள் ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றப்பட்டு பூதவுடல் புனித கொஞ் சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

5/10, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.:5745

தகவல்:
சாந்தன் (மகன்),
சுரேந்திரன் (மகன்).

(74988)


## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

991 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்

மேடம் 11 15 18 47

06-06-2008

செல்லுபடியாகும் தொடர் இல. 5738727 - 5753153

ஜக்பொட் பரிசு ரூபா. 2,333,800/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 315,859 | 10/- | 3,158,590/- |
| 2 இலக்கங்கள் | 28,995 | 20/- | 579,900/- |
| 1 இல. + லக்கினம் | 28,653 | 30/- | 859,590/- |
| 2 இல. + லக்கினம் | 2,655 | 100/- | 265,500/- |
| 3 இலக்கங்கள் | 769 | 500/- | 384,500/- |
| 3 இல. + லக்கினம் | 82 | 5,000/- | 410,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 100,000/- | 300,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 2,333,800/- | 2,333,800/- |
| மொத்தம் | | | 8,291,880/- |
| வெற்றிபெறாத டிக்கட்டுகளுக்கான பரிசு | 5 | 100,000/- | 500,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 377,022 | | 8,791,880/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 1,000,000/-

தொடர் இலக்கம் 4851574 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2008 ஜூன் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் வெற்றி பெறாத டிக்கட்டுகளில் இருந்து ரூபா 100,000/- பரிசு பெறும் சீட்டுக்கள்.

| | |
|---|---|
| கண்டி | 5739936-5-21 |
| கொழும்பு | 5751878-8-06 |
| மாத்தளை | 5750276-2-42 |
| களுத்துறை | 5752646-0-82 |
| திருகோணமலை | 5745661-2-04 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சேர் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## FOR SALE

"2 Sri Ford Prefect Car"
Topping Condition.
Inquire : No. 608, K.K.S. Road, Jaffna.
T.P.No : 3665 [75166]

## தவறிவிட்டது

றஜனி சபாரத்தினம் என்பவருடைய தே.அ.அ. (685642620V) விசேட அ.அ.என்பன யாழ்ப்பாணத்திற்கும் சுன்னாகத்திற்கும் இடையில் (06.06.2008) அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும்.

தொடர்பு: சதீஸ் நகைமாடம்
இல.: 30, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம். [75215]

## வெளிவந்து விட்டது
## வெற்றித்தேன்

ஆண்டு 05 புலமைப்பரிசில் பரீட்சை மாணவர்களுக்கான வழிகாட்டி நூல்

ஆசிரியர் : க.ஸ்ரீகணேசகுமார்

கிடைக்கும் இடங்கள்

1.பூபாலசிங்கம் புத்தகசாலை
2.ஸ்ரீலங்கா புத்தகசாலை
3.ஓல் சிலோன் டிஸ்ரிபூட்டர்ஸ்
4.சுப்பிரமணிய புத்தகசாலை


ஸ்ரீ சாயி கல்வி நிலைய பரீட்சைப் பகுதி வெளியீடு [75217]

## பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் அலுவலகம் இடம் மாற்றம்

இதுவரை காலமும் வலி.தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப பணிமனையில் இயங்கி வந்த பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகரின் அலுவலகம் பண்டத்தரிப்பு, சில்லாலை வீதியிலுள்ள வீடு மூன்றிற்கு இம்மாதம் முதலாம் திகதி முதல் இடமாற்றம் செய்யப்பட்டு இயங்கிவருகிறது. (203-135)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

### அமரர் பொன்னையா தேவராசா (மணி)



தோற்றம் 10.02.1952

மறைவு 10.05.2008

நாள்கள் எத்தனை மறைந்தாலும் மறையாது
உங்கள் நினைவுகள் எம் நெஞ்சில்
உயிருள்ளவரை விழிநீருடன் நிலைத்திருக்கும்
உடலால் நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும்
உள்ளத்தால் உணர்வால் உங்களோடு வாழ்கின்றோம்

என்றும் உங்கள் நினைவில் வாழும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

நாகம்மாள் வீதி,
உடுவில், சுன்னாகம். [75173]

## தேசத்தைக் கட்டியெழுப்புதல், தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சு
## சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்டம் (ராா்ப்)
## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## "ஆ.அ.வ" கடன் இல. 0006 - SRI (SF)
## யாழ்.மாவட்ட நிர்மாண வேலைக்கான
# கேள்வி அறிவித்தல் இல: 06

1.சுனாமியால் பாதிக்கபட்ட பிரதேச மீள்கட்டுமானத் திட்ட (TAARP) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து (ஆ.அ.வ") கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன், கீழேயுள்ள அட்டவணையில் விவரிக்கபட்படுள்ள கட்டட நிர்மாண வேலைகளுக்கான ஒப்பந்தத்தின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2.இதன் பின்னகத்துத் தொழில் தருநராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டத்தின் பணிப்பாளருக்காக பின்வரும் ஒப்பந்தத்திற்கு தகுதிவாய்ந்த கேள்வி கோருவோரிடமிருந்து பொறி வைக்கப்பட்ட கேள்விகள் தற்போது கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இலங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | வரி சேர்க்கப்படாத ஆகு செலவும் ஒப்பந்த காலமும் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலை பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 01 | JF/TAARP/HS/02 | பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் மருந்துக் களஞ்சியம் அமைத்தல் | Rs.14.54 Mn<br>7 Months | M5 (Building) | 150,000/= |
| 02 | JF/TAARP/HS/03 | பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் வைத்திய நிபுணர்களுக்கான விடுதிகள் அமைத்தல். | Rs.22.57 Mn<br>8Months | M4 (Building) | 230,000/= |
| 03 | JF/TAARP/RD/03 | பருத்தித்துறை நகர சபைப் பிரிவிற்குட்பட்ட 2.623 கி.மீ நீளமுள்ள வீதி புனரமைத்தல் | Rs. 6.55 Mn<br>6 Months | M6 (Road) | 70,000/= |

3. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.
   I) நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்திசெய்யப்பட்ட தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அடட்வணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.
   II) கடந்த ஐந்து வருடங்களினுள் ஆகக்குறைந்தது இரு ஒத்த தன்மையிலான ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடிவுறுத்தியுள்ளதுடன், கடந்த ஐந்து வருடங்களின் போது மேற்கொள்ளப்பட்ட வேலைகளில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன்/ அல்லது உசாவலர்களிடமிருந்து சான்றுப் பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சலக வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்பட வேண்டும்.
   III) "இக்ராட்" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்பவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவையும் கொண்டிருக்க வேண்டும்.
   IV) மோசடியான அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலை செய்ததனால் தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக் கூடாது.
   V) ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தகாரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தைச் சமர்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

4. ஏதாவது ஒப்பந்தகாரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக்கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளும் NECORD வேலைகள் அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

5 தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலதிக விவரங்களை மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் அலுவலகம் நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணத்தில் பெற்றுக் கொள்ளலாம். தொலைபேசி: 021 - 2223625, தொலைநகல்: 021 - 2225163, மின்னஞ்சல் necordjf @ sltnet.lk

6. ஒப்பந்த ஆவணங்கள் ஆனி மாதம் 9ஆம் திகதி 2008முதல் ஆனி மாதம் 23ஆம் திகதி 2008வரை முற்பகல் 9 மணியிலிருந்து பிற்பகல் 3 வரை வேலை நாள்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

7. இரு பொறிவைக்கப்பட்ட உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும், கேள்வியிடுவோரின் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும் கேள்விகள் கொண்டிருக்க வேண்டும் என்பதுடன் இது தொடர்பாக பந்தி 8இல் குறிப்பிடப்பட்டுள்ள இடம், திகதி மற்றும் நேரம் ஆகியவற்றிற்கு ஏற்ப ஒப்படைக்கப்பட வேண்டும்.

8. அந்தந்த வேலைக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் "தலைவர், மாவட்டக் கேள்விச் சபை, நீகோட், கச்சேரி, யாழ்ப்பாணம்" இற்கு ஆனி மாதம் 30ஆம் திகதி 2008 பி.ப.2 மணிக்கு முன்பாகக் கிடைக்க வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்கலாம்.

9. ஒப்பந்தகாரருக்கு கேள்வி கோருவதற்கு வேண்டிய விளக்கத்தை அளிப்பதற்கான கூட்டமொன்று கச்சேரியில் ஆனி மாதம் 20ஆம் திகதி 2008 பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்வி கோருவோருக்கு ஏற்படும் ஆகு செலவுகளுக்கு அல்லது செலவீனங்களுக்குத் தொழில்தருநர் பொறுப்பாக மாட்டார்.

க.கணேஷ்,
தலைவர்,மாவட்டக் கேள்விச்சபை,
அரசாங்க அதிபர்.
யாழ்ப்பாண மாவட்டம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பலாலி ஆசிரிய கலாசாலை இல்லங்களுக்கிடையிலான வருடாந்த தடகளப் போட்டி கோண்டாவில் இராமகிருஷ்ண விளையாட்டு மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள்.

போட்டிகளில் வீரர்களின் ஓட்டப்போட்டிகளையும் வீராங்கனைகளின் உடற்பயிற்சி நிகழ்வையும் வெற்றிபெற்ற வீரர்களுக்குச் சான்றிதழ்களைப் பலாலி ஆசிரியர் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி இந்திரமதி இராமச்சந்திரா வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் : லக்ஸ்மன்)

### முதன்முதலாக இடம்பெற்ற

# பாடசாலை மட்ட கபடிச் சுற்றுப்போட்டி இணுவில் சென்றல் வலய சம்பியனானது

வலி.வட்க்கு, ஜூன் 9

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே முதல் தடவையாக இடம்பெற்ற ஆண்களுக்கான கபடிப் போட்டியில் இணுவில் மத்திய கல்லூரி வலய சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் இணுவில் மத்திய கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் ஆரம்பத்தில் போட்டியைச் சூடாகத் தொடங்கிய போதிலும் தொடர்ந்து அந்த நிலைமையை அருணோதயாக் கல்லூரியால் பேணமுடியவில்லை.

இணுவில் மத்திய கல்லூரி போட்டி தொடங்கும்போது எத்தனை உற்சாகத்துடன் காணப்பட்டார்களோ அதே உற்சாகத்துடன் தொடக்கம் முதல் இறுதிவரை விளையாடி வெற்றியைத் தமதாக்கிக் கொண்டார்கள்.

முதல் தடவையாகப் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்றபோதிலும் விதிகளை உரியமுறையில் கடைப்பிடித்து விளையாடியமை ஒரு சிறப்பம்சம் என்றே கூறலாம்.

போட்டி நிறைவில் இணுவில் மத்திய கல்லூரி 69:24 புள்ளிகள் என்ற அடிப்படையில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியை வெற்றிபெற்று வலயச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயமும் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன. இரு அணிகளும் முதல் தடவையாக இடம்பெற்ற போட்டியில் விளையாடிய போதிலும் நுட்பங்களைக் கையாண்டு விளையாடின.

ஆட்ட இறுதியில் வசாவிளான் மத்திய மகா வித்தியாலயம் மல்லாகம் குளமங்கால் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தை 31:25 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி கொண்டு மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. (1-86)

**குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்**

## மாவட்ட மட்டத்தில் கூடைப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,ஜூன்9

யாழ். மாவட்ட மட்டத்தில் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியை யாழ். செயலகம் நடத்தவிருக்கின்றது.

இந்தப் போட்டியைச் செயலக விளையாட்டுப் பிரிவு, கூடைப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் முதல் தடவையாக நடத்துகின்றது.

இச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றவிருக்கும் கூடைப்பந்தாட்ட அணிகளை எதிர்வரும் 11 ஆம் திகதிக்கு முன்னர் செயலக விளையாட்டுப் பிரிவில் மாவட்ட விளையாட்டு அதிகாரிகளிடம் பதிவுகளை மேற்கொள்ளுமாறு மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி கேட்டுள்ளார். (1)

## கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் மாவட்டச் சம்பியனானது கோப்பாய்

வலி.வடக்கு, ஜூன் 9

யாழ்.மாவட்டப் பிரதேச செயலகங்கள், உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலக அணி மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மல்லாகம் மகா வித்தியாலயத்தில் இடம்பெற்ற இறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியும் கோப்பாய் பிரதேச செயலக அணியும் மோதிக் கொண்டன.

கடந்த பல வருடங்களாக இறுதிப் போட்டியில் இந்த இரு பிரதேச செயலகங்களும் மோதி வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஆட்டம் ஆரம்பமாகியது முதல் முடிவடையும் வரை இரு அணிகளும் மிகவும் உற்சாகமாகவும் இறுதிவரை சோர்வடையாதும் விளையாடி இரு அணிகளும் பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றுக் கொண்டன.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் நான்கு சுற்றுக்களில் போட்டி முடிவடைந்தது. ஆனாலும் ஒவ்வொரு சுற்றிலும் இறுதிவரை எந்த அணி வெற்றி பெறும் என்று தீர்மானிக்க முடியாத அளவுக்கு விளையாடியமையும் சுட்டிக்காட்டக் கூடியதாகும்.

முதல் இரண்டு சுற்றுக்களையும் கோப்பாய் பிரதேச செயலகம் 25:17, 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

மூன்றாவது சுற்றை எப்படியும் வெல்ல வேண்டும் என்ற இலக்குடன் விளையாடிய தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணி 25:22 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

நான்காவது சுற்றை வெல்ல வேண்டும் என்ற இலக்குடன் இரு அணிகளும் விளையாடின. ஆனாலும் கோப்பாய் பிரதேச செயலக அணி இறுதி நேரத்தில் காட்டிய திறமையான விளை யாட்டின் மூலம் 25:20 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது.

ஐந்து சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் கோப்பாய் பிரதேச செயலகம் 03:01 சுற்று. என்ற அடிப்படையில் தெல்லிப்பழைப் பிரதேச செயலக அணியை வெற்றி பெற்று யாழ்.மாவட்ட சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மாகாண மட்டப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். (1-86)

## இருபது/20 சுற்றுப் போட்டியை மாவட்ட ரீதியாக நடத்த ஏற்பாடு

வலி.வடக்கு, ஜூன் 9

யாழ்ப்பாணம் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் அடுத்த மாதம் இருபது/20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்துவதற்கு நடவடிக்கை மேற் கொண்டுள்ளது.

தற்போது 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியை நடத்தி வரும் ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் முதல் தடவையாக யாழ்.மாவட்ட கழகங்களுக்கு இடையே இருபது/20 சுற்றுப் போட்டியை நடத்த முடிவு செய்துள்ளது.

ஏற்கனவே யாழ்ப்பாணம் பல்கலைக் கழக விளையாட்டு அலகு ஒரு சிநேக பூர்வமான போட்டியை பல்கலைக்கழக அணிக்கும், பழைய மாணவர் அணிக்கும் இடையே நடத்தியிருந்தது.

ஜொலி ஸ்ரார் விளையாட்டுக் கழகம் நடத்தும் இருபது/ 20 போட்டியில் ஆகக் குறைந்தது யாழ்.குடாநாட்டில் உள்ள விளையாட்டுக் கழகங்களில் 16 கழகங்களாவது கலந்துகொள்ளும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (1-86)

# உடுவில் பிரதேச செயலக தடகளப் போட்டி முடிவுகள்

வலி.வடக்கு, ஜூன்9

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கழகங்களுக்கு இடையில் தடகளப் போட்டிகள் சுன்னாகம் ஸ்கந்த வரோதயாக்கல்லூரியில் நடத்தப்பட்டன.

இப் போட்டிகளில் வெற்றி பெற்றோர் விவரம் வருமாறு:-

**ஆண்கள்**

100 மீற்றர்- க.யசோதரன்(இணுவில் இந்து வி.க ), சுமன் (உடுவில் மத்தி வி.க.), இ.தமிழரன் (இணுவில் இந்து வி.க.)

400 மீற்றர்- சுமன்(உடுவில் மத்தி வி.க.), என். ரூபிநாத் (றோயல் வி.க.), ந.வினோசன் (இணுவில் ஐக்கிய வி.க.)

800 மீற்றர் - என்.ரூபிநாத் (றோயல் வி.க.), எஸ்.இந்திரகுமார் (உடுவில் மத்தி வி.க.), ம.செல்வகுமார் (அண்ணா வி.க.)

1500 மீற்றர் - கே. ஜீவன்ராஜ் (உடுவில் மத்தி வி.க.), இ.தமிழ்வாணன் (இணுவில் இந்து வி.க.), விஜிந்தன் (கலாஜோதி வி.க.)

5000 மீற்றர் - சி.வவி (ஞானமுருகன் வி.க.), செ.டினேஸ்குமார் (இணுவில் ஐக்கிய வி.க.), எஸ்.இந்திரகுமார் (உடுவில் மத்தி வி.க ).

10,000 மீற்றர் - சி.வவி (ஞானமுருகன் வி.க.), இ.நயந்தன் (அண்ணா வி.க.), கு.நிலக்ஷன் (இணுவில் இந்து வி.க.).

*ஈட்டி எறிதல்* - சி.வாகீஸ்வரன்(ஸ்ரீ முருகன் வி.க.), எஸ்.தேவன் (றோயல் வி.க.), சி.கோகுலன் (இணுவில் இந்து வி.க.)

*தட்டெறிதல்* - சி.கோகுலன் (இணுவில் இந்து வி.க.), சி.வாகீஸ்வரன் (ஸ்ரீ முருகன் வி.க.), கி.ஸ்ரீகுகன் (றோயல் வி.க.).

*தத்தி மிதித்துப் பாய்தல்*- பா.திருக்குமரன் (இணுவில் இந்து வி.க.), க.சுகந்தன் (இணுவில் இந்து வி.க.).

*குண்டெறிதல்* - சி.வாகீஸ்வரன்(ஸ்ரீ முருகன் வி.க.), சி.கோகுலன் (இணுவில் இந்து வி.க.), இ.றெஜிக்குமார் (ஸ்ரீ முருகன் வி.க.)

*நீளம் பாய்தல்* - க.சுகந்தன் (இணுவில் இந்து வி.க.) க.யசோதரன் (இணுவில் இந்து வி.க.), எம். நிருகாந் (றோயல் வி.க.).

*உயரம் பாய்தல்* - நி.றொபேட்கரன் (உடுவில் மத்தி வி.க.), எம்.நிருஷாந் (றோயல் வி.க.), க.நிஷாந் (இணுவில் இந்து வி.க.).

*அஞ்சலோட்டம்* - 4x400 - உடுவில் மத்தி வி.க., இணுவில் இந்து வி.க., ஸ்ரீமுருகன் வி.க., இணுவில் ஐக்கிய வி.க.

*அஞ்சலோட்டம் - 4x100* - இணுவில் இந்து வி.க., உடுவில் மத்தி வி.க., இணுவில் ஐக்கிய வி.க.

**பெண்கள்**

*100 மீற்றர்* - ந.கௌதமி (ஸ்ரீமுருகன் வி.க), கோ.சுவர்ணா (ஸ்ரீமுருகன் வி.க.).

*200 மீற்றர்* - ந.கௌதமி(ஸ்ரீமுருகன்வி.க), கோ.சுவர்ணா (ஸ்ரீமுருகன் வி.க.), பி.ஜெயந்தினி (உடு வில் ஐக்கிய வி.க.)

*400 மீற்றர்* - ச.யாழினி (இணுவில் இந்து வி.க.), மோ.சர்மிலவாணி (ஸ்ரீமுருகன் வி.க.), பி. ஜெயந்தினி (உடுவில் ஐக்கிய வி.க.)

*800 மீற்றர்* - ச.யாழினி (இணுவில் இந்து வி.க.) மோ.சர்மிலவாணி (ஸ்ரீமுருகன் வி.க.), எம்.நளினி (உடுவில் ஐக்கிய வி.க.)

*1500 மீற்றர்* - ச.யாழினி (இணுவில் இந்து வி.க.), இ.விஜிதா (றோயல் வி.க.), கு.கலைறூபி (அண்ணா வி.க.)

*5000 மீற்றர்* - க.டினோசனா (றோயல் வி.க.), இ.விஜிதா (றோயல் வி.க.), எஸ். (உடுவில் ஐக்கிய வி.க.)

*தல்* - எம்.சுபாஜினி (உடுவில் ஐக்கிய வி.க.), வி.கெஸ்மி (அண்ணா வி.க.), சி.கிருஷ்ண மதி (அண்ணா வி.க.).

*தட்டெறிதல்* - எம்.சுபாஜினி (உடுவில் ஐக்கிய வி.க.), மோ.சர்மிலராணி (ஸ்ரீமுருகன் வி.க.), சி.கிருஸ்ணமதி (அண்ணா வி.க.), கு.நிஷாந்தி (றோயல் வி.க.), க.கௌதமி (ஸ்ரீமுருகன் வி.க.)

*நீளம் பாய்தல்* - எஸ்.சுபாஜினி (உடுவில் ஐக்கிய வி.க), கு.நிஷாந்தி (றோயல் வி.க.), க.கௌதமி (ஸ்ரீமுருகன் வி.க.)

*ஈட்டி எறிதல்* - எம்.சுபாஜினி (உடுவில் ஐக்கிய வி.க.), கீ.கீர்த்திகா (ஸ்ரீமுருகன் வி.க.), ட.டல்சி (உடுவில் ஐக்கிய வி.க.)

*உயரம் பாய்தல்* - கீ.கீர்த்திகா (ஸ்ரீமுருகன் வி.க.), எஸ்.சுபா ஜினி (உடுவில் ஐக்கிய வி.க.), க.நளாயினி (இணுவில் இந்து வி.க.)

*தத்தி மிதித்துப் பாய்தல்* - கீ.கீர்த்திகா (ஸ்ரீமுருகன் வி.க.), எஸ்.சுபாஜினி (உடுவில் ஐக்கிய வி.க.), ப.நளாயினி (இணுவில் இந்து வி.க)

*அஞ்சலோட்டம் - 4x400 , 4x100* - ஸ்ரீமுருகன் வி.க, உடுவில் ஐக்கிய வி.க, இணுவில் இந்து வி.க.

(1-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

**இராஜரட்ணம் விக்னேஸ்வரராஜா**

அன்னையின் மடியில் 03.01.1958 — ஆண்டவன் அடியில் 10.05.2008

கடந்த 10.05.2008 அன்று கனடாவில் இறைபதம் அடைந்த எமது அன்பு மருமகன் அமரர் இராஜரட்ணம் விக்னேஸ்வரராஜா அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (09.06.2008) கனடாவில் அவரின் இல்லத்தில் இடம்பெறும்.

அன்னாரின் பிரிவினால் துயருற்றிந்த எமக்கு தொலைபேசி, தொலைநகல் மற்றும் வீடு தேடிவந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய குமரகோட்டம் வைரவப்பெருமானை வேண்டி நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

பலாலி வீதி,
உரும்பிராய் தெற்கு,
உரும்பிராய்.

கைலாயர் கனகரத்தினம் (மாமன்),
ச.ஆனந்தபாலன் (சகலன்).

(75164)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில் 22 ✱ 10 ✱ 1940



கர்த்தரின் பாதத்தில் 09 ✱ 06 ✱ 2003

**செல்வி மருதர் கண்ணகை**

*(றீற்ரா)*

(ஓய்வுபெற்ற தாதி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை)

*கர்த்தருடைய பரிசுத்தவான்களின் மரணம் அவர் பார்வைக்கு அருமையானது.* சங்கீதம்116:15

எங்கள் பாசம் மிகுந்த சகோதரியின் பிரிவால் வாடும்:
செல்லாச்சி, விசாலாட்சி, தங்கமேனி, இராமையா,
அமிர்தமணி, பூமணி, போகம் மற்றும்
மைத்துனர்மார், உறவினர், நண்பர்கள்
அனைவரும் இன்றைய தினம் எமது அன்புத் தாயை
நினைவு கூர்ந்து அன்னாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

16, மடம் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்: **ம.தங்கமேனி** (சகோதரி).

(75137)

## விளாவெளி இந்து மயானம் பிரதேச மக்களால் புனரமைப்பு

வலி. தென்மேற்கு, ஜூன் 9

விளாவெளி இந்து மயானம் ''வேல்ட் விஷன்'' நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் அப்பகுதி மக்களால் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

மயானக் காணியில் நீண்ட காலமாகப் பற்றைகள், செடிகள் நிறைந்து இருந்ததால் பூதவுடல்களைத் தகனம் செய்ய வரும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

இதனையிட்டு பிரான்பற்று கலைமகள் சனசமூக நிலையம் மேற்கொண்ட முயற்சியினால் ''வேல்ட் விஷன்'' நிறுவனத்தின் நிதி அனுசரணையுடன் மயான வளவு துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

இதே வேளை - இங்குள்ள கிணறும் இறைத்துச் சுத்திகரிக்கப்பட்டுள்ளது.

(202-135)

## மின் கட்டணத்தைச் செலுத்துவதில் வாடிக்கையாளர் மும்முரம்

நல்லூர், ஜூன்9

நீண்ட காலமாக தமக்குரிய மின்சாரக் கட்டணத்தை மின்சார சபைக்குச் செலுத்தத் தவறியவர்கள் தற்போது தமது மின் கட்டணத்தைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மின் கட்டணப் பணத்தை செலுத்தாதவர்களின் மின் விநியோகம் நாவாந்துறை, திருநெல்வேலிப் பகுதிகளில் தற்போது துண்டிக்கப்படுவதாகவும் அதையடுத்தே பாவனையாளர்கள் தமது நிலுவைப் பணத்தைக் கட்டுவதில் அக்கறை காட்டுவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

பல வாடிக்கையளர்கள் தாங்கள் இது வரை செலுத்த வேண்டிய பணத்தை ரூபா 15 ஆயிரம், ரூபா 20 ஆயிரம் என வங்கிகளிலும் தபாலகங்களிலும் செலுத்திக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது.

(202-111)

## துயர் பகிர்கின்றோம்

J/80, பெரியகடை மாதர் அபிவிருத்திச் சங்க பொருளாளர் திருமதி ச.பிறேமானந்தியின்
அன்புக் கணவர்

**சண்முகராஜா சந்திரகுமார்**

அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

J/80, பெரியகடை மாதர் அபிவிருத்திச் சங்கம்.

(75216)

## கண்ணீர் அஞ்சலி



மானிப்பாய் அஞ்சல் அதிபராகக் கடமையாற்றிய

**அமரர் வைத்திலிங்கம் சண்முகநாதன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு, அவர் தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

உப அஞ்சல் அதிபர்கள்,
கட்டுடை, நவாலி, சங்குவேலி, புதுமடம்.

(75211)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 24 ✱ 11 ✱ 1951



உதிர்வு 10 ✱ 05 ✱ 2008

**திருமதி யஸ்ரின் மேரி** *(அனற்றா)*

தன் நலம் கருதாது எமக்கெல்லாம் நீயாயிருந்து
எமை வாழ வைத்த அன்புத் தெய்வமே!
பட்ட துன்பங்கள் போதுமென்றா நீ இறைவனடி சென்று விட்டாய்!
நாளும் பொழுதும் நீயில்லாது உன் நினைவால் வாடுகின்றோம்.

33, நாலாம் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 0779769852.

கணவன், மகன்,
குடும்ப உறவினர்கள்.

(75200)

## விழிகளில் நீர் தாங்கிய 7ஆம் ஆண்டுதனில்...

மண்ணகம் மகிழ 11 09 1984



விண்ணகம் நெகிழ 29 05 2001

**செல்வி இலங்கைநாயகம் துஷ்யந்தி** *(துர்க்கா)*

(உயிரியல் பிரிவு மாணவி, திருமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி)

*திதி: வைகாசி மாத சுக்கில பட்ஷ ஷப்தமி (09.06.2008) திங்கட்கிழமை*

கடமையில் கண்ணெனவே விளங்கி நின்றாய்!
கடலெனவே அறிவு நீ கொண்டு வாழ்ந்தாய்!
கல்வி சிறப்புதனைக் காட்டியெமை மகிழ்வித்தாய்!
கற்றோரும் மற்றோரு முமைப் போற்றி நின்றனர்!
கருணை மொழி தனைபேசி யெமை மகிழ்வித்தாய்!
கருங்கூற்றுவன் புன்பெருமைமீது பொறாமை கொண்டு
காற்றோடு வுன்னுயிரை கலக்க வைத்தான்
கதறுகின்றோ முமையிழந்து ஆண்டு ஏழாய்...!

எமது குலச் செல்வம் எமைவிட்டுப் பிரிந்து ஆண்டுகள் ஏழு கடந்துவிட்ட நிலையில் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

இராமகிருஷ்ணா வீதி,
கோண்டாவில் கிழக்கு, கோண்டாவில்.
தொ.பே. 021 222 6364.

பிரிவால் தவிக்கும்:
அப்பா, அம்மா, அம்மம்மா
அண்ணாமார், அண்ணிமார், மருமக்கள்.

(75131)

## நான்காம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில் 30 01 1931



விண்ணில் 25 05 2004

**திருமதி ஆறுமுகம் கனகம்மா**

(இளைப்பாறிய ஆசிரியர், யா/ கமலாம்பிகை வித்தியாசாலை, மீசாலை)

திதி: சஷ்டி (09.06.2008)

ஆண்டுகள் நான்கு போனதம்மா உங்கள் அன்பு முகம் எமைப் பிரிந்து
கண்முன்னே நீங்கள் இல்லை எம்மோடு உறவாட
எண்ணாத நாளில்லை இதயத்தில் எப்போதும் உங்கள் நினைவுகளே!
அன்பின் இலக்கணமாய் பண்பின் பிறப்பிடமாய்
எம் எல்லோரையும் வாழ வைத்த ஒளி விளக்கே!
எம் உயிர் உள்ளவரை அழியாது உங்கள் நினைவு.

''ஜெயபதி'',
தாமோதரம்பிள்ளை வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(75196)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# இலங்கையில் ஜனநாயகம் தோற்றுப் போனமை ஏன்?

இலங்கையில் சுமார் அறுபது ஆண்டுகால - ஆறு தசாப்த கால -ஜனநாயக ஆட்சியின் பெறுபேறாக உள்நாட்டு யுத்தம் உக்கிரம் பெற்று, இன்று இலங்கைத் தீவு எங்கும் இரத்த ஆறு பெருக்கெடுத்து ஓடுகிறது. வன்முறைப் புயல் என்றுமில்லாதவாறு மோசமாக வீசுகின்றது. எங்கும் அழிவு. எங்கும் சாவு. எங்கும் நாசம். எங்கும் ரணகளம். இதுவே இலங்கையின் வாழ்வியல் நியதி என்றாகி விட்டது.

இது ஏன்? எதனால் வந்தது? எதற்காக வந்தது?

உலகில் உன்னத ஆட்சிமுறை வடிவமாகப் போற்றப்படும் ஜனநாயகம் இலங்கையில் தோற்றுப்போய் வறிதாகி நிற்பதைக் காண்கிறோம். இதற்குக் காரணம் என்ன?

முடியாட்சி முறை முடிந்து உலகில் குடியாட்சி பரவிய காலத்திலேயே ஜனநாயகக் கட்டமைப்பு முறை நன்கு காலூன்றத் தொடங்கிவிட்டது.

ஜனநாயகக் கட்டமைப்பு ஆட்சிமுறை உருவாக்கிக் கொடுத்த தொட்டிலிலே ஜனநாயகக் கோட்பாட்டின் செல்லப் பிள்ளையாக முதலாளித்துவமும் செழித்து வளர்ந்தது.

ஆனால் இந்த முதலாளித்துவத்தின் வீழ்ச்சி குறித்து கார்ள் மாக்ஸ் போன்ற அறிஞர்கள் கனவு கண்டனர். முதலாளித்துவத்தின் சுரண்டல் தீவிரமாகி வறுமையின் விளிம்புக்குப் பாட்டாளி வர்க்கம் தள்ளப்படும்போது சகித்துக் கொள்ள முடியாத அவலத்தில் உழைக்கும் வர்க்கம் உழலும். இதைத் தாங்கிக் கொள்ள முடியாத அந்த வர்க்கம் கொதித்தெழ பாட்டாளிகளின் தலைமையில் வர்க்கப் புரட்சி வெடிக்கும். முதலாளியம் தனக்குத் தானே புதைகுழி தோண்டும். அந்தப் புதைகுழியிலிருந்து புதிய உற்பத்தி வடிவமாக சோசலிஸ சமுதாயம் பிறக்கும். பொதுவுடைமையின் உச்ச நிலையில் அந்த சமுதாயத்தில் வர்க்கப் பிரிவு அழிந்து சமத்துவம் நிலவும். அந்த சோசலிஸ சமுதாயம் மேலும் வளர்ச்சி கண்டு கம்யூனிஸ சமூகம் உருவாகும். முரணிய பேதங்களற்ற அந்தக் கம்யூனிஸம் இறுதியில் உலக மயமாகி பரிபூரணமாக அதை ஆட்கொள்ளும். முழு மனித சமுதாயத்தையும் அது தழுவிக் கொள்ளும். - இப்படிக் கற்பனை செய்தார் கார்ள் மாக்ஸ்.

அது வெறும் கனவாகவும் கற்பனையாகவுமே முடிந்தது. நிஜத்தில் - யதார்த்தத்தில் - நடைமுறையில் - அது சாத்தியப்படவே இல்லை.

மாக்ஸின் தீர்க்க தரிசனம் பிழைத்துப் போயிற்று. முதலாளியம் புதைகுழியில் அமுங்கிப்போகவில்லை. மாறாக மாக்ஸ் போற்றிப் புகழ்ந்த சோசலிஸ அரசுகளே இடிந்து, சரிந்து, குலைந்து போயின.

பொருளுற்பத்தியில் முதலாளித்துவத்துக்கு ஈடாக எந்த ஓர் உற்பத்தி வடிவமும் நிலைத்து நீடித்து நிற்கப்போவதில்லை என்ற செய்தியை உலகுக்கு அறைந்து கூறியபடி கிளைவிட்டு விருட்சமாக விஸ்வரூப வடிவமெடுத்துக் கொண்டிருக்கிறது முதலாளியம்.

பொருளுற்பத்தி வடிவத்தில் முதலாளியம் உச்சம் பெற்றமை போல -

அரசுக் கட்டமைப்பு வடிவங்களில் - அரசமைப்புச் சட்டங்களில் - உச்சக் கட்ட வடிவமாக ஜனநாயகம் உருவாக்கம் பெற்றது.

மக்களாட்சி, மத ஆட்சி, பாஸிஸம், நாஸிஸம், கம்யூனிஸம், குடியாட்சி, முடியாட்சி என்று பல்வேறு வடிவங்களில் உருக்கொண்ட ஆட்சியமைப்புகள் அடிப்படை மனித உரிமைகளுக்கும், மனித சுதந்திரங்களுக்கும், மனித விழுமியங்களுக்கும், மனித கௌரவங்கள் மற்றும் அபிலாஷைகள் போன்றவற்றுக்கும் மதிப்பளிக்கத் தவறியமையால் அவை இறுதியில் சிதைந்து, அழிந்து, நிலைத்து நீடிக்க முடியாமல், செயலிழந்து போயின.

ஆனால் இவற்றின் அழிவிலிருந்து பிறப்பெடுத்த ஜனநாயகம் - அதுவும் தாராண்மை ஜனநாயகம் - இன்று உலகின் பல்வேறு நாடுகளில் உறுதியான அரசியல் அத்திவாரமாகத் தலைநிமிர்ந்து உயர்வாகவும் திடமாகவும் விளங்குகின்றது.

ஆனால் இலங்கை போன்ற சில நாடுகளில் அது தோற்றுப்போய் விட்டது.

மக்களால் மக்களுக்காக நடத்தப்படும் மக்களாட்சி என்று போற்றப்படுகின்ற இந்த ஜனநாயகம் இலங்கையில் நேர்மாறான ஆட்சிக்கு அல்லவா வழி செய்து நிற்கிறது?

இந்த ஆட்சி முறையில் அநீதியும், அடக்குமுறையும் தலைதூக்கியுள்ளன. மனித உரிமைகள் மோசமாக மீறப்படுவதும், நசுக்கப்படுவதும் இந்த ஜனநாயக ஆட்சியின் பெருமைகளாகிவிட்டன.

அடிப்படை மனித உரிமைகள், குடியுரிமைகள், அரசியல் உரிமைகள், தனி மனித சுதந்திரங்கள் என்றெல்லாம் ஜனநாயக ஆட்சியில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட்ட விடயங்கள் யாவும் அதே ஆட்சி அதிகாரத்தால் இன்று மிதிக்கப்படும் விடயங்களாகிவிட்டன.

ஒழுங்கும் அமைதியும் ஒத்திசைவான மனித உறவுகளும் சமத்துவமும்; சமூக நீதியும், கௌரவமும் கூடிய உன்னத மானுட வாழ்வைத் தருவதற்கு ஜனநாயகம் இங்கு தவறிவிட்டது.

இதற்குக் காரணம் என்ன?

பெரும்பான்மையினரின் கருத்து என்ற மக்களின் எண்ணிக்கை அளவை மட்டும் முன்னிலைப்படுத்தி, அந்த முடிவுக்கு முக்கியத்துவம் கொடுத்த ஜனநாயகம், அந்த எண்ணிக்கையின் சிந்தனையோட்டத்தில் புதைந்து கிடக்கும் எண்ணத்தின் நியாயத்தைக் கருத்தில் கொள்ளத் தவறிவிட்டது.

இரு தேசியங்கள் வாழும் ஒரு தேசத்தில், அந்தத் தேசியங்களின் தலைவிதியை எண்ணிக்கையின் அடிப்படையில் தீர்மானிக்க ஜனநாயகம் இடமளித்தபோது -

பெரும்பான்மையினரைக் கொண்ட தேசியம், பேரினவாத மேலாண்மையோடு சிறுபான்மைத் தேசியத்தை சுரண்டிச் சூறையாடி, அடக்கி, ஒடுக்கி, அடிமைப்படுத்துவதற்கு அது வழிசமைத்துக் கொடுத்துவிட்டது.

இத்தகைய மேலாதிக்க அடக்குமுறைக்கு இடமளிக்காத விதத்தில் விடயங்களை உறுதி செய்கின்ற அம்சங்களை ஜனநாயகக் கட்டமைப்பு முறை தன்னகத்தே கொண்டு செயற்படவோ -

அல்லது அந்த ஜனநாயகக் கட்டமைப்பு ஆட்சியை அனுபவிக்கின்ற மக்கள் கூட்டத்தினர், ஜனநாயகத்தின் மேன்மையான மாண்பைக் கருத்தில் கொண்டு, தாராண்மைத் தெளிவோடு நீதியாக நடக்கவோ -

தவறும்போது ஜனநாயகம் தோற்றுவிடுகிறது. பேரழிவுக்கும் பெருநாசத்துக்கும் அது வழி வகுத்துவிடுகிறது.

அதற்கு நல்லதோர் உதாரணம் இலங்கை.

# அரசின் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக வட, கிழக்கு மக்கள் பொருளாதார நெருக்கடிக்குள்

## கூட்டமைப்பு எம்.பி.செல்வம் கூறுகின்றார்

கொழும்பு, ஜூன் 9

அரசாங்கத்தின் பல்வேறு நடவடிக்கைகள் காரணமாக வடக்கிலும் கிழக்கிலும் மக்கள் பொருளாதாரரீதியில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொள்கின்றனர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாடாளுமன்றில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற ஏற்றுமதி அபிவிருத்திக் கட்டளைச் சட்ட மூலம் மீதான விவாதத்தில் கூட்டமைப்பின் சார்பில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

விலை வாசி உயர்வினால் சாதாரண மக்கள் அரிசியையும் பாணையும் வாங்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். அதற்கு மேலதிகமாக மதவாச்சியில் பொருள்களை இறக்கி ஏற்றுவதற்கான செலவும் பொதுமக்கள் மீதே சுமத்தப்படுகின்றது.

### இடம்பெயர்ந்து மரநிழலில் வாழும் மக்கள்

மடுவும் அடம்பனும் இராணுவத்தின் வசம் வந்துள்ள நிலையில் 25 ஆயிரத்துக்கும் அதிகமானோர் இடம்பெயர்ந்து கிளிநொச்சிக்குச் சென்று மரநிழலில் வாழ்ந்து வருகின்றனர். இம் மக்களுக்குத் தேவையான வைத்திய உதவிகளும் அத்தியவசியப் பொருள்களும் கிடைப்பதில் பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

அடக்குமுறைக்குள்ளாக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு ஏற்றுமதி இறக்குமதித் துறையில் எந்த நன்மையும் ஏற்படவில்லை. இத்துறை மக்களை வறுமையிலிருந்தும் பொருளாதாரச் சிக்கலில் இருந்தும் மீட்சி பெறச் செய்ய வேண்டும் - என்றார். (202)

# மகேஸ்வரன் எம்.பியின், படுகொலை தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல்

கொழும்பு, ஜூன் 9

ஐக்கியத் தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடளுமன்ற உறுப்பினர் தி.மகேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பாக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இவ் வழக்கில் 28 சாட்சிகள் ஆஜராகவுள்ளனர். 9 தடயப் பொருள்களும் முன்வைக்கப்பட்டன.

கடந்த வியாழக்கிழமை சட்டமா அதிபரால் இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இவ் வழக்கில் பிரதான எதிரியாக ஜோன்சன் கொலின் வெலன்ரைன் என்பவரின் பெயர் குறிப்பிடப்பட்டு அவருக்கு எதிராக கொழும்புக் கொச்சிக்கடை பொன்னம்பலவானேஸ்வர் ஆலயத்தில் வைத்து மகேஸ்வரன் எம்.பியைச் சுட்டுக் கொன்றமை, சந்திரகுமார் மஹிந்தன் என்பவரைக் கொலை செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளன.

கொலைக்குப் பயன்படுத்திய துப்பாக்கி, துப்பாக்கி ரவைகள், கைக்குட்டை, காற்சட்டை உட்பட 9 தடயப் பொருள்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஜனவரி மாதம் முதலாம் திகதி மகேஸ்ரன் எம்.பி சுட்டுக் கொல்லப்பட்டார். அச்சம்பவத்தில் சந்திரகுமார் மஹிந்தன் என்பவரும் கொல்லப்பட்டார். இது தொடர்பான வழக்கு கொழும்[illegible] நீதிவான் நீதிமன்றத்தில் நட[illegible]பெற்று வருகின்றது. பிரதான எதி[illegible] உட்பட 4 பேர் விளக்க மறியலி[illegible] வைக்கப்பட்டு வழக்கில் ஆஜராகி வருகின்றனர்.

இந் நிலையில் சட்டமா அதிபர் பிரதான சந்தேக நபருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

# முருங்கனில் வெள்ளியிரவு குடும்பஸ்தர் சுட்டுக்கொலை

மன்னார், ஜூன் 9

மன்னார் மாவட்டம் முருங்கனில் குடும்பதஸ்தர் ஒருவர் வெள்ளிக்கிழமை இரவு 7 மணியளவில் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதே இடத்தைச் சேர்ந்த ஐந்து பிள்ளைகளின் தந்தையான நடராசா ஜெயராஜன் (வயது 35) என்பவரே சுட்டுக் கொல்லப்பட்டவராவார்.

அளவக்கைப் பகுதியில் உள்ள குளம் ஒன்றில் குளிக்கச் சென்ற வேளை அவர் சுடப்பட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (1)

# மெலிஞ்சிமுனைக் கிராம மீனவருக்கு வலைகள்

குருநகர், ஜூன் 9

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை கிராமத்தைச் சேர்ந்த 36 மீனவர்களுக்கு உலக தரிசன நிறுவனம் மூலம் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாக ஊர்காவற்றுறைக் கடற்றொழில் பரிசோதகர் எம்.பி.அன்று தெரிவித்தார்.

அத்துடன் நண்டு வளர்ப்பிற்காக ஜீ.ரி.இசற் நிறுவனத்தால் பருத்தியடைப்பு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு நான்கு கூடுகளும், ஊர்காவற்றுறை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்திற்கு மூன்று கூடுகளும், ஊர்காவற்றுறை அன்னை வேளாங்கன்னி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்திற்கு இரண்டு கூடுகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (203-51)

# ஆற்றல் மேம்படுத்தல் பயிற்சி

யாழ்ப்பாணம், ஜூன் 9

வடக்கு, கிழக்கு சமுதாய மீள் கட்டமைப்புத் திட்டத்தின்கீழ் சமூக நலத்துறைத் திணைக்கள வெளிக்கள அலுவலர்களுக்கான ஆற்றல் மேம்படுத்தல் பயிற்சி நெறி இன்று திங்கட்கிழமையும் நாளை செவ்வாய்க்கிழமையும் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

சமூகநலத்துறைத் திணைக்கள மாவட்ட அலுவலர் ஆ.ஞானவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந் நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். (203)

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 28 | 10.06.2008 |
| | செவ்வாய்க்கிழமை |
| திதி: | ஸப்தமி |
| | பி.ப. 01.52 வரை |
| நட்சத்திரம் : | பூசம் |
| | பி.இ. 02.35 வரை |
| சுபநேரம் : | 10.22 - 11.52 |
| ராகுகாலம் : | 02.52 - 04.22 |

# யாழ்.போதனாவைத்தியசாலையில் பழுதடைந்த 'எக்ஸ்ரே' இயந்திரம் திருத்தப்படுகிறது

யாழ்ப்பாணம், ஜூன் 9

யாழ்.போதனா வைத்தியசாலையில் பழுதடைந்துள்ள 'எக்ஸ்ரே' இயந்திரத்தைத் திருத்தும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தென்னிலங்கையில் இருந்து இந்த 'எக்ஸ்ரே' இயந்திரத்தைத் திருத்துவதற்கான தொழில்நுட்பவியலாளர்கள் மூவர் வருகைதந்து குறிப்பிட்ட இயந்திரத்தைத் திருத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதேவேளை மேலும் இரண்டு 'எக்ஸ்ரே' இயந்திரங்கள் பழுதடைந்துள்ளன என்றும் இந்த இயந்திரங்களை வேறு நிறுவனத்தைச் சேர்ந்தவர்களே வழங்கியமையால் அந்த நிறுவனத்தின் தொழில்நுட்பவியலாளர்களே வருகை தந்து திருத்தவேண்டும் என்றும் கூறப்படுகிறது.

திருத்தம் செய்யப்படாது உள்ள ஏனைய இரண்டு எக்ஸ்ரே இயந்திரங்களையும் திருத்துவதற்கான முதற்கட்ட நடவடிக்கைகளை வைத்தியசாலை நிர்வாகத்தினர் முன்னெடுத்துள்ளனர் என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (203-68)

# பொதுமக்களை இலக்குவைத்து தாக்குதல்; தனது பிரசைகளுக்கு பிரித்தானியா எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 9

பொதுமக்களை இலக்கு வைத்து இலங்கையில் நடத்தப்பட்டுவரும் குண்டுத் தாக்குதல்களை அடுத்து பிரித்தானியா தனது பிரசைகளுக்கு பயண எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இது தொடர்பில் பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் பொது நலவாய அலுவலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கான பயணங்களைப் பிரித்தானியா குடிமக்கள் தவிர்ப்பதுடன், இராணுவ முகாம்கள், அரச அலுவலகங்கள் துணை இராணுவக் குழுக்களின் அலுவலகங்களுக்கு அருகாமை ஊடாகச் செல்வதையும் தவிர்த்தல் வேண்டும்.

தற்போதைய தாக்குதலில் பொது மக்கள் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். பொதுமக்களின் போக்குவரத்துக்களும் தாக்குதலில் அதிகம் பாதிக்கப்படுகின்றன.

இந்த வருடம் நடைபெற்ற தாக்குதல்களில் 100 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுளனர். எனவே வெளிநாட்டு குடிமக்கள் பாதிப்படையும் சாத்தியங்களும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (203)

# அஞ்சல் ஊழியர் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம்,ஜூன்9

ஒருங்கிணைந்த அஞ்சல் சேவையில் வெற்றிடமாக உள்ள பதவிகளுக்கு ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சையில் தோற்ற இயலாமற் போன குடாநாட்டு விண்ணப்பதாரிகளுக்கான போட்டிப் பரீட்சை கூடிய விரைவில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி போட்டிப் பரீட்சை கடந்த மாதம் 16 ஆம் திகதி கொழும்பில் நடத்தப்பட்ட போதிலும் அதற்கான அழைப்புக்கள் குடாநாட்டு விண்ணப்பதாரிகளுக்கு ஒரு வாரம் கழிந்த நிலையிலேயே கிடைத்திருந்தன.

இந்த நிலையில் மேற்படி விண்ணப்பதாரிகள் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை அமைச்சர் அலுவலகத்தில் வைத்து சந்தித்து கேட்டுக்கொண்டதற்கு இணங்க தபால் தொலைத் தொடர்பு அமைச்சர் மகிந்த விஜேசேகரவுடன் தொலை பேசி மூலமாகத் தொடர்பு கொண்டு இப் போட்டிப் பரீட்சையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நடவடிக்கை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன் பிரகாரம் அஞ்சல் சேவை ஊழியர்களுக்கான போட்டிப் பரீட்சை யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட உள்ளதுடன் போட்டிப் பரீட்சை நடத்தப்படும் திகதி வெகுவிரைவில் அறிவிக்கப்படும் என்று அமைச்சு அறிவித்துள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவைகளோ பலப்பல உண்டு, ஆனாலும் மாணவர்களின் கல்விக் கண்ணைத் திறப்பதில் அக்கறையாகவுள்ள அளவெட்டி தெற்கு றோ.க.த.க.பாடசாலை



அதிபர்
திருமதி தருமபாலசுந்தரம் வாசுகி

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டத்திற்கு உட்பட்ட அளவெட்டி தெற்கு றோமன் கத்தோலிக்கத் தமிழ்க்கலவன் பாடசாலை செபஸ்தியர் தேவாலய வளாகத்தில் இயங்கிவரும்



பாடசாலையின் முகப்புத் தோற்றம்

ஒரு ஆரம்பப் பாடசாலையாகும்.

தேவைகள் பல இருந்தாலும் இதனை யிட்டு அலட்டிக் கொள்ளாது கிடைத்த வளத்துடன் நம்பி வந்த பிள்ளைகளின் கல்விக் கண்ணை திறப்பதில் அக்கறையாக ஆசிரியர்களும், அதிபரும் செயற்படுகிறார்கள்

இதற்கு ஏற்ப பெற்றோர்களும் எமது பாடசாலை எங்களுடைய அதிபர், ஆசிரியர்கள்




என்ற அக்கறையுடன் பழகுகிறார்கள்.

அதிபருடன் உரையாடிக் கொண்டிருந்த போது அங்கு வந்த பெற்றோரிடம் பாடசாலை பற்றி கேட்டபோது, பாடசாலைக்கு தேவைகள் உண்டு. அவை முழுமையாகப் பூர்த்தி செய்யப்படாத நிலையிலேயே உள்ளன. கடந்த மாதம் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ஒரு தொகை மேசைகளைக் கொண்டு வந்து பாடசாலைக்கு வழங்கினர்.

பாடசாலையின் அதிபர் திருமதி தருமபால சுந்தரம் வாசுகியுடன் உரையாடியபோது:-

பாடசாலையின் அபிவிருத்தியையும் மாணவர்களின் உயர்ச்சியையும் கருத்தில் கொண்டு செயல்படும் தன்மையும்இருப்பதைக் கொண்டு இலக்கை அடைய வேண்டும் என்பதில் தெளிவாகவும் இருக்கிறோம்.

தரம் ஒன்று தொடக்கம் 5 வரையான வகுப்புகளில் 85 மாணவர்கள் கற்றுக் கொண்டு இருக்கிறார்கள்.

நான்கு நிரந்தர ஆசிரியர்களும் ஒரு தொண்டர் ஆசிரியரும் கடமை புரிகின்றனர்.

75 ஆவது ஆண்டை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் இப்பாடசாலை 1933 ஆம் ஆண்டு சுவாமி ஞானப்பிரகாசரினால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு பாடசாலையாகும். ஏனைய பாடசாலைகளைப் போன்று கட்டட வசதிகள் எதுவும் இங்கு இல்லை.

தேவாலயமும் பாடசாலையும் ஒரே வளாகத்தில் காணப்படுவதனால் தேவாலய வாசலே பாடசாலைக்கான வாசலாகவும் காணப்படுகின்றது.

இதனால் பாடசாலைக்கான முகப்பு

## தேவாலய வளாகத்தினுள்ளேயே இயங்கி வருகிறது பாடசாலை

வளைவுகள் எவையும் இல்லை. இதனால் வீதியால் செல்வோர் பாடசாலை இருப்பதை உணர மாட்டார்கள்.

தரம் 5 புலமைப் பரீட்சையில் கடந்தாண்டு 15 பிள்ளைகள் தோற்றி 5 பிள்ளைகள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள்.

கடந்த ஆண்டுகளில் மாணவர்கள் தரம் 5 புலமைப் பரீட்சைகளில் சித்தி அடைந்துள்ளார்கள்.

இந்த ஆண்டும் மாணவர்கள் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு ஆசிரியர்கள், அதிபரினால் தயார்படுத்தப்பட்டு இருக்கிறார்கள். விசேட வகுப்புகள் பரீட்சைகளும் கூட நடத்தப்பட்டு வருகின்றன.

ஆங்கில பாடத்திற்கு தொண்டர் ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

அதிபர், ஆசிரியர்களின் நிதி உதவியுடன் பெற்றோர்கள் வழங்கும் உதவியைக் கொண்டு சிறு கொடுப்பனவுடன் ஆங்கிலம் கற்பிக்கப் பட்டு வருகின்றது.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம் இயங்கப் படுகின்றது. பொருளாதார உதவியைவிட ஏனைய உதவிகளை பெற்றோர்கள் வழங்கி இருக்கின்றார்கள்.

பழைய மாணவர் சங்கம் அண்மைக் காலமாக இயங்கிய போதிலும்தற்போது இயங்குவதில்லை.

இதனை மீள இயக்கும் நடவடிக்கையை அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினர் ஆகியோர் மேற்கொண்டு வருகின்றன.

பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களும் பிள்ளைகளின் விளையாட்டுப் போட்டிகள், பரிசளிப்பு விழா போன்ற நிகழ்வுகளுக்கு வேண்டிய நிதி உதவிகளை தம்மால் இயன்ற வரையில் வழங்கி வருகின்றனர்.

தேவாலயத்தில் பங்கு தந்தையும் பாடசாலையின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு உதவிகளை செய்து வருகின்றார்.

தமிழ்த் தினப் போட்டிகள், ஆங்கில தினப் போட்டிகளில் மாணவர்கள் கோட்டம் வரை சென்றுள்ளனர். சிலர் பரிசுகளையும் பெறுகின்றார்கள்.

கடந்த ஆண்டு பாலசுப்பிரமணியம் ஸ்ரீக்குமார் 11 வயதுப் பிரிவு ஓட்டப் போட்டியில் 75 மீற்றர், 100 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் வலய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார். பாடசாலைக்கென விளையாட்டு மைதானம் இல்லை. பாடசாலை முற்றமாகவும் தேவாலய வீதியாகவும் காணப்படும் சிறிய இடமே மாணவர்களின் விளையாட்டு மைதானமாகக் காணப்படுகின்றது.

மாணவர்களின் கல்வி விடயத்தில் பெற்றோர்களின் போதிய அக்கறையின்மையும், கவனமின்மையும் தான் மாணவர்களின் ஆற்றலை முழுமைப்படுத்த முடியாமல் இருப்பதற்கு காரணமாக இருக்கின்றது என்று அதிபர் கவலை வெளியிடுகிறார்.

பெற்றோர்களும் பிள்ளைகளின் கல்வியில் கூடிய கவனம் எடுத்தால் பிள்ளைகளின் கல்வியில் மேலும் சிறப்பான முடிவுகளை எட்ட முடியும் என்பதில் அதிபர், ஆசிரியர்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றார்கள்.

வகுப்பறைகள் யாவும் நீண்ட மண்டபத்தில் இடம்பெறுகின்றன.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம் ஒதுக்கிய நிதியின் மூலம் கடந்த ஆண்டு வகுப்பறைகள் பிரிக்கப்பட்டன. எனினும் அவை முழுமையாக இடம்பெறவில்லை.

அதிபரின் அலுவலகம் கல்வித் திணைக்களத்தினால் கட்டி வழங்கப்பட்டுள்ளது.

கனடா வாழ் அளவெட்டி மக்கள் பாடசாலைக்கு மின்சார வசதிகளை ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள். ஆரம்பப் பாடசாலையாக இருக்கின்றபோதிலும் சிறுவர் விளையாட்டு உபகரணங்கள் மட்டுப்படுத்திய அளவிலேயே இங்கு காணப்படுகின்றன.

பாடசாலைக்கு வேண்டிய சில வசதிகளை ஜி.ரி.இசற், யுனிசெவ் நிறுவனங்கள் பூர்த்தி செய்து வழங்கியுள்ளார்கள்

உலக உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவு வழங்கும் செயல் திட்டம் நல்லமுறையில் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதற்கான உதவிகளைப் பெற்றோர் சுழற்சிமுறையில் செய்து வருகின்றனர்.

உலக உணவுத்திட்டம் பாடசாலை மட்டத்தில் வழங்குவது நிறுத்தப்படுமானால் எமது பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்கள் என அதிபர் கவலை தெரிவிக்கின்றார்.

உலக உணவுத் திட்டம் பாடசாலை மட்டத்தில் நிறுத்தப்படக் கூடாது எனவும் வலியுறுத்திக் கூறுகின்றார்கள்.

பாடசாலையில் கணனி வசதிகள் இல்லை. அயல் பாடசாலைகள் இத்தகைய வசதிகளை கொண்டுள்ளமையால் எமது பாடசாலைப் பிள்ளைகளும் அதனைப் பற்றி அறிவதில் ஆர்வம் காட்டுகின்றார்கள்.

இதனை ஈடுசெய்யக் கூடிய நிலையில் பாடசாலை இல்லை என்று அதிபர் கூறுகின்றார்.

கடந்த காலத்தில் யுனிசெப் நிறுவனம் வழங்கிய பயிற்சிப் புத்தகம் எமது பாடசாலை மாணவர்களுக்கு முழுமையான பயன்பாடு உடையதாகக் காணப்படுகின்றது.

இன்றும் மாணவர்கள் அதனை பயன் படுத்துகின்றமையால் கற்றலுக்கும் கற்பித்தலுக்கும் தடை இல்லாமல் இருக்கின்றது எனவும் அதிபர் தெரிவித்தார். ✸

**பவித்திரன்**

# மோசடிப் பேர்வழிகள் கணனியைப் பயன்படுத்திப் பெரும் தில்லுமுல்லுகளைச் செய்வர்! எச்சரிக்கையாக இருங்கள்!!

**இக்கட்டுரையின் இரண்டாவது பகுதி கடந்த 06.06.2008 உதயன் கல்விப்புனல் பகுதியில் வெளியானது. அதன் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகின்றது.**

கணனி மூலம் ஏமாற்றுதல் வஞ்சனை செய்தல் மேலை நாடுகளில் அதிகம் நடைபெறுகின்றது. அதாவது கம்யூட்டர் மூலம் மதிப்பு எண்களைக் கூட்டி பண மோசடிகள் செய்தல், ஒருவரின் வேலையில் மாற்றம் செய்தல். அத்துடன் வேலையில் பிழைகள் செய்தால் ஒருவர் செய்த வேலையை அழித்தல். இப்படியான செயல்கள் இடம் பெறுவதால் இதற்குக் காரணம் தனி மனிதனது பேராசையாகும்.

**கணனிகளின் விவரப் பாதுகாப்பு**

கணனியில் பதிவு செய்யப்பட்ட விவரங்களைப் பாதுகாத்தல் வேண்டும். கணனியில் பலதரப்பட்ட விபரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். அரசின் உள்நாட்டு ,வெளிநாட்டு, தற்காப்பு, மற்றும் பொருளாதாரக் கொள்கைகள் அவற்றில் பதிந்து இருக்கலாம். பல நிறுவனங்களின் உற்பத்தி இரகசியங்கள், வர்த்தக இரகசியங்கள் அவற்றில் இருக்கலாம். தனி மனிதனது உள் வாழ்வு, வெளிப்புற வாழ்வு அடங்கி இருக்கலாம். இரகசியங்கள் எப்படிப்பட்டவையாயினும் அவை அதைப்பெற அதிகாரம் மற்றவர் கையிலே சிக்காமல் பாதுகாப்பது கணனி நிறுவனத்தின் முக்கிய கடமைகளில் ஒன்று.

தனிமனிதர்கள், குழுக்கள் அல்லது நிறுவனங்கள் தங்களைப் பற்றிய விவரங்களை பெறுவதற்கு அதிகாரம் இல்லாதவர்களை அனுமதிக்கலாகாது. அதைப்பெறும் அனுமதியுள்ளவர் சொந்த இலாபம் கருதி பிறருக்குத் தெரிவிக்கலாகாது. ஆகவே விவரங்கள் தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ அதிகாரம் அற்றவர்களுக்குத் தெரிவிப்பதில் இருந்தோ அல்லது அதிகாரம் அற்ற முறையில் மாற்றியமைக்கப் படுவதிலிருந்தோ, பாதுகாப்பதே விவரப் பாதுகாப்பு ஆகும். அதற்கு கையாளப்படும் நுட்பங்கள், கணனியின் உள்ளமைப்பு அம்சங்கள், சாதாரண திட்டங்கள் மாறித் செயல்முறைகள் மற்றும் காவல் வசதியூட்டும் முறையாகும்.

இவ்வாறு விவரங்கள் பாதுகாக்கப்படுகின்றன. அவ்வாறு பாதுகாப்பதற்கான காரணம். ஒரு கணனித் தொகுதி பலதரப்பட்ட பயனீட்டாளர்களால் பயன்படுத்தப்படுகின்றது. அடுத்து விவரப்பரிமாற்றங்கள் கணனிகள் மூலம் ஒரு இடத்தில் இருந்து மற்ற இடத்திற்கு அனுப்பப்படுகின்றன.

இரகசியமான விவரங்களை வேறு யாரும் இடையில் பெறுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. அதிகாரமற்றவர்கள் விவரங்களை மாற்றுதல், அழித்தல் செய்யவாய்ப்புண்டு. அதற்கு இரகசிய பெயரில் பதிவுசெய்து வைத்தல் வேண்டும்.

நேர்மை, நிர்வாகம் கணனியின் உள் அமைப்பு கணனி மொழி, இயக்கச் செயல்முறைகள், நேரடிப்பாதுகாப்பு நடவடிக்கைகள் இயக்குவோரின் நேர்மையைக் குறிக்கும்.

ஊழியர்களின் நேர்மை, நன்றியுணர்வு, கணனி வட்டாரங்களில் நுழைவதற்கு நேரடிக் கட்டுப்பாடு, பதிவுகள், தணிக்கைகள்.

**பாடசாலைகளில் கணனி**

அதிபர் அலுவலகத்தில் அதிபர் தனக்கு வேண்டிய பாடசாலை விவரங்களை உடனுக்குடன் கணனி மூலம் அறிய முடியும். பாடசாலையில் ஒவ்வொரு ஆசிரியர்களின் பெயர், முகவரி, ஆசிரியர் கல்வித்தகமை, ஆசிரியர்களின் பாடநேரம், அவர்களின் வகுப்புகள், நேரசூசி, லீவுவிவரம், சம்பளம், வகுப்பு ஆசிரியர்களின் விவரம், ஆசிரியர்களின் தனிப்பட்ட பொறுப்புக்கள். உதாரணமாக ஆசிரியர்களின் கருத்தரங்குகள், அவர்களின் பாடக்குறிப்புகள், பாடத்திட்டங்கள், கிழமை நாள்களின் பாடக்குறிப்புகள், யார், யார் கொடுத்தார்கள், கொடுக்கவில்லை என்பது போன்ற விவரங்கள் இலகுவாக அறியமுடியும்.

பாடசாலை விட்டு விலகும் மாணவர்களின் விவரம் கணனியால் பதியப்பட்டு இருக்கும். பாடசாலையை விட்டுவிலகிய மாணவர்கள் தமக்கு அதிபரிடம் நற்சாட்சிப்பத்திரம் வழங்கு மாறு கேட்டால், அந்த மாணவனின் சகல விவரங்களையும், அதாவது மாணவனின் திறமை, பாடசாலை ஒழுங்கு, விளையாட்டு, வகுப்புத் தலைமை, பாடசாலைத் தலைவர், மாணவர் சங்கத்தின் தலைமை அல்லது அங்கத்தவர் என்ற விவரங்கள், பாடசாலையில் பெற்ற பரிசில்கள் பற்றிய விவரங்களை எல்லாம் கணனியால் பதிவு செய்வதன்மூலம் சகல விவரங்களையும் திரட்டி, உடன் எடுத்துக் கொடுக்க இலகுவாக இருக்கும்.

பாடசாலையில், பெற்றோர்கள் வந்து தமது பிள்ளைகளின் கற்றல் தொடர்பாக பற்றி அதிபருடன் கலந்துரையாடும்போது அதிபர் கணனி பதிவுகள் மூலம் சகல மாணவர்களின் பெற்றோருடனும், அவர்களின் பிள்ளைகளின் படிப்பு, திறமை, பாடசாலை வரவு, பாடங்களின் விஷேட திறமைகள், பாடப்புள்ளிகள், பாடம் தவிர்ந்த ஏனைய துறைகள் போன்றவற்றில் மாணவர்களின் தரம் திறமை பற்றி விரிவாகப் பெற்றோருக்கு விளக்கம் அளித்து பெற்றோருடன் கலந்துரையாட இது உதவியாக இருக்கும்.

வகுப்பாசிரியர்கள் தமது வகுப்பு மாணவர்களின் பெற்றோர் விவரங்களையும் பதிய முடியும். மாணவர்களின் தினசரி வரவு, வசதிக் கட்டணம், பாடசாலைப் பரீட்சையில் மாணவர்களின் தவணை முன்னேற்றம் பற்றி அறியமுடியும்.

பெற்ற புள்ளிகளை பதிவின் மூலம் மாணவர்கள் எந்தப் பாடத்தில் திறமையாகச் செய்துள்ளார்கள் என்பதையும், எந்தப் பாடத்தில் அதிகுறைவாக உள்ளனர். எப்பாடத்தில் கூடிய கவனம் மாணவர்கள் செலுத்த வேண்டும் போன்ற விவரங்களை அறிய முடியும். வகுப்பு மாணவர்கள், அவர்களின் கடமைகள், மாணவர்களின் ஒழுங்கு, ஒழுக்கம், பரீட்சை முடிவுகள் இவர்களின் வகுப்பு நிலை இவற்றின் மூலம் வகுப்பு மாணவர்களின் சகல விவரங்களையும், மாணவர்களின் முன்னேற்றம் பற்றியும் அறியமுடியும். வகுப்பு ஆசிரியர்கள் பாட ஆசிரியர்களும் மாணவர்களின், பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப்பற்றி கலந்துரையாடும் பொழுது பெற்றோருக்கு, இவ் விவரமூலம் சகல பெற்றோர் கேள்விகளுக்கும் தெளிவாக, விளக்கமாகப் பதில் கூறமுடியும்.

கணனி சகல வழிகளிலும் சகல துறைகளிலும் எமக்கு உதவியாக உள்ளது. கணனி மூலம் நாம் பதிவு செய்த விடயங்கள் தரவுகளை அதன் Hard ware அல்லது Flap Disk (Save) செய்து பதிவு செய்து வைக்க முடியும். எமக்குத் தேவையான விபரங்களை நாம் கொடுத்த விவரங்களை எமக்குத் தேவையான நேரம் உடனடியாகப் பெற முடியும். கணனி மூலம் நாம் எமக்கு தேவையான விளம்பரங்களுக்குத் தேவையானபடி எழுத்துக்களைப் பெரிதாகவும், முக்கிய விடயங்களைக் காட்டவும் முடியும். ஒரு விடயத்தை நாம் பல தடவை பதிவு செய்ய முடியும். எமக்கு தேவை அற்றவற்றை அழித்து புதியதைப் பதிவு செய்ய முடியும். நாம் பதிவு செய்ய விவரத்தை எடுத்து எமக்கு வேண்டிய மேலதிகமான விவரத்தை ஒன்று சேர்த்துக் கொள்ள முடியும்.

ஒரு விவரத்தை நாம் கணனியில் பதிவு செய்யும் பொழுது திகதி, நேரம் போன்றவற்றை நாம் இலகுவாகப் பெற முடியும். பின்பு சிலவரிகள், பந்திகளை இடையில் சேர்க்க வேண்டுமாயின் INSERTING மூலம் இலகுவாகச் செய்ய முடியும். Single Line, Double Line Under Line மூலம் பிரதான , முக்கியமான விடயங்களை அடையாளப்படுத்திக் காட்ட முடியும். Row &Columms மூலம் எமது கணக்கு விவரங்களைப் பதிவு செய்ய முடியும்.

கணக்குகளின் மொத்தத் தரவுகளை நாம் கொடுத்து அவற்றை கூட்டல், கழித்தல், பெருக்கல், பிரித்தல் போன்ற சகல கணக்குகளையும், கணக்குகளை Copy பண்ணல் போன்றவற்றையும் மிக இலகுவாகச் செய்ய முடியும். சில விவரங்களை தேடல் மூலம் கண்டுபிடிக்க முடியும்.

எமக்குத் தேவையான சில தரவுகளைக் கொடுத்து, எமக்கு அத்தரவுக்கு ஏற்றமுறையில் Line Graph, Bar Graph, Pie Graph போன்றவற்றையும் இலகுவில் பெறமுடியும். நாம் இவ் Graph மூலம் விவரங்களை ஒரே பார்வையில் ஒப்பிட்டுப் பார்க்கலாம். சில கணக்கு விவரங்களைக் கொடுத்து ஏறுவரிசை, இறங்கு வரிசை முறையில் நாம் இலகுவாகவும், உடனடியாகவும் பெறமுடியும். சகல விலைகளையும் நாம் கணனி மூலம் தரவுகளைக் கொடுத்து அதன் செயற்பாட்டின் மூலம் இலகுவாகச் செய்ய முடிகின்றது.

அத்துடன் சில குறிப்பிட்ட பகுதிகளை எமக்கு முக்கிய சாரம் சத்தை கணனி விரைவாக எடுத்து இலகுவாகத்தருகின்றது. எனவே இன்று சகல துறைகளிலும் கணனி எமக்கு உதவுவதால் நாம் கணனி உலகில் வாழ்கின்றோம் என்று குறிப்பிடலாம். (முற்றும்)



**திருமதி ராஜநாயகி கதிர்காமநாதன்**
**[B.A.Dip. in Computer Science (Canada)]**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இங்கிலாந்துடனான மூன்றாவது டெஸ்ட்

# தோல்வியை நோக்கி நியூஸிலாந்து அணி


மக்கியூலம்

டிரன்ட் பிரிட்ஜ், ஜூன் 09

இங்கிலாந்துக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியில் நியூஸிலாந்து அணி தோல்வியை நோக்கி பயணித்துக்கொண்டிருக்கின்றது.

'பலோ-ஒன்' நிலையில் துடுப்பெடுத்தாடிவரும் நியூஸிலாந்து அணி நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் தனது இரண்டாம் இன்னிங்ஸில் 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இன்னிங்ஸ் தோல்வியைத் தவிர்ப்பதற்கு இன்னும் 64 ஓட்டங்களை நியூஸிலாந்து அணி பெறவேண்டும்.

முன்னதாக முதல் இன்னிங்ஸில் ஜேம்ஸ் அன்டர்ஸனின் பந்துவீச்சைச் சமாளிக்க முடியாமல் நியூஸிலாந்து அணி 123 ஓட்டங்களுக்குள் சுருண்டது. அன்டர்ஸன் 7 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார்.

இங்கிலாந்துக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூஸிலாந்து அணி மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இரண்டாவது டெஸ்டில் வென்று 1-0 என்ற கணக்கில் இங்கிலாந்து தொடரில் முன்னிலை பெற்றது. தற்போது நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து அணியின் ஆதிக்கம் தொடர்கிறது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்ற முதல் நாள் ஆட்ட நேரமுடிவில் இங்கிலாந்து அணி 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 273 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இரண்டாம் நாள் ஆட்டத்தில் தொடர்ந்து விளையாடி முதல் இன்னிங்ஸில் 364 ஓட்டங்களுக்குள் இங்கிலாந்து சகல விக்கெட்டுகளையும் இழந்தது. நியூஸிலாந்தின் ஒபிரைன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பின்னர் களமிறங்கிய நியூஸிலாந்து அணிக்குத் தொடக்கத்திலேயே அதிர்ச்சி காத்திருந்தது. அன்டர்ஸன் பந்துவீச்சில் ஆரம்ப வீரர் ரெட்மொன்ட்(1) ஆட்டமிழந்தார். இவரையடுத்து மக்கியூலமும்(9) வந்த வேகத்தில், அன்டர்ஸனிடம் சரணடைந்தார். பின்னர் வந்த ரெய்லர்(21), பிளைன்(0) இருவரும் அன்டர்ஸன் வீசிய ஒரே ஓவரில் பவிலியன் திரும்பினர்.

அதன்பிறகும் அன்டர்ஸன் அடங்கவில்லை. ஜிம்மி கௌவ்(40), ஓரம்(7) ஆகியோரின் விக்கெட்டுகளையும் வீழ்த்தி நியூஸிலாந்து அணியை நிலைகுலையச் செய்தார். அந்த அணி 33.2 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 96 ஓட்டங்களை எடுத்து பரிதாப நிலையில் இருந்த போது போதிய வெளிச்சம் இல்லாததால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாம் நாள் ஆட்டமும் போதிய வெளிச்சம் இல்லாததால் தாமதமாகத் தொடங்கியது. நியூஸிலாந்து அணித்தலைவர் வெட்ரோறி(7), சைட்பொற்றத்தின் வேகத்தில் ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து வந்த கைல் மில்ஸ் (1), ஒபிரைன்(0) ஆகியோர் ஸ்ருவேட் போர்ட்டின் பந்துவீச்சில் வீழ்ந்தனர். ஹோப்கிங்ஸ் 15 ஓட்டங்களில் ஆட்டமிழக்க நியூஸிலாந்து அணியின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது. 46.3 ஓவர்களில் வெறும் 123 ஓட்டங்களில் அந்த அணி ஆட்டமிழந்து 'பலோ -ஒன்' பெற்றது. இங்கிலாந்தின் ஜேம்ஸ் அன்டர்ஸன் சிறப்பாகப் பந்துவீசி 43 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 7 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

241 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2ஆம் இன்னிங்ஸை ஆரம்பித்த நியூஸிலாந்து அணியை இங்கிலாந்து வேகப் பந்துவீச்சாளர்கள் மீண்டும் மிரட்டினார்கள். ஆரம்ப வீரர்களான ரெட்மொன்ட் 2 ஓட்டங்களுடன் போர்ட்டின் வேகத்திலும், ஜிம்மி கௌவ் 19 ஓட்டங்களுடன் சைட்பொற்றமின் வேகத்திலும் விக்கெட்டைப் பறிகொடுத்தனர்.

அடுத்துக் களம்புகுந்த ரெய்லர் 14 ஓட்டங்களுடன் போர்ட்டின் பந்துவீச்சில் பவிலியன் திரும்பினார். 4ஆவது விக்கெட்டில் இணைந்த மக்கியூலம் - பிளைன் ஜோடி அணியைத் தூக்கிநிறுத்த முயற்சித்தது. இந்தஜோடி தம்மிடையே 94 ஓட்டங்களைச் சேர்ந்திருந்த நிலையில் மக்கியூலம் 71 ஓட்டங்களுடன் அன்டர்ஸனின் வேகத்தில் 'போல்ட்' ஆனார். தொடர்ந்து பிளைனும் 49 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க நியூஸிலாந்து அணி மீண்டும் இக்கட்டில் மாட்டிக்கொண்டுள்ளது.

நேற்றுமுன்தினம் நிறைவுபெற்ற மூன்றாம் நாள் ஆட்டநேர முடிவில் நியூஸிலாந்து அணி 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 177 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ஹோப்கிங்ஸ் 7 ஓட்டங்களுடனும், ஜேக்கப் ஓரம் 8 ஓட்டங்களுடனும் களத்தில் உள்ளனர். நேற்று நான்காம் நாள் ஆட்டம் நடைபெறவிருந்தது.

## இந்திய அணியில் கோனி!

புதுடில்லி, ஜூன் 09

முத்தரப்புத்தொடருக்கான இந்திய அணியில் வாய்ப்புப் பெற்றுள்ளார் மன்பிரித் கோனி. சமீபத்திய ஐ.பி.எல். தொடரில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக அசத்தலாகப் பந்துவீசிய இவர், காயமடைந்தசிறிசாந்துக்குப் பதிலாக இடம்பெற்றுள்ளார்.

பங்களாதேஷில் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகள் மோதும் முத்தரப்பு ஒருநாள் தொடர் நேற்று ஆரம்பமாகியது. இதற்கான இந்திய அணியில் வேகப்பந்துவீச்சாளர் சிறிசாந்த் இடம் பெற்றிருந்தார். ஆனால், காயம் காரணமாக நீக்கப்பட்டுள்ளார். இவருக்குப் பதிலாக பஞ்சாப் வீரர் கோனி சேர்க்கப்பட்டுள்ளார்.

இதுவரை ஐந்து முதல்தர போட்டிகளில் விளையாடிய கோனி 13 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார். சமீபத்தில் நடந்த ஐ.பி.எல்., தொடரில் டோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்காக விளையாடிய இவர் 16 போட்டிகளில் 17 விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். இப்படிச் சிறப்பாக செயல்பட, ஒருநாள் போட்டிக்கான இந்திய அணியில் முதன்முறையாக வாய்ப்பு பெற்றுள்ளார்.

## விளையாட்டு அரங்குகளில்

### யூரோ கிண்ணக் கால்பந்து

# செக் குடியரசு, போர்த்துக்கல் அணிகள் வெற்றி

பாசல், ஜூன் 08

யூரோ கிண்ணக் கால்பந்தாட்டத் தொடரின் முதல் நாள் ஆட்டத்தில் செக் குடியரசு, போர்த்துக்கல் அணிகள் வெற்றியை ருசித்தன.

ஐரோப்பிய அணிகள் மோதும் யூரோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடர் நேற்றுமுன்தினம் தொடங்கியது. இம்முறை போட்டியை சுவிற்ஸர்லாந்து, ஆஸ்திரியா ஆகிய நாடுகள் இணைந்து நடத்துகின்றன. 'ஏ' பிரிவில் இடம்பெற்றுள்ள சுவிற்ஸர்லாந்து, செக் குடியரசு அணிகள் மோதின. இரு அணி வீரர்களும் விட்டுக் கொடுக்காமல் போராட, முதல் பாதி கோல் எதுவும் அடிக்கப்படாமல் முடிந்தது.

இரண்டாவது பாதியில் செக் குடியரசு வீரர்கள் துடிப்பாக ஆடினர். 71ஆவது நிமிடத்தில் சுவிற்ஸர்லாந்து வீரர்களை அழகாகச் சமாளித்த வக்லாவ் ஸ்வர்காஸ் முதல் கோல் அடித்தார். இதன் மூலம் செக் குடியரசு அணி 1-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது. இதற்கு பதிலடி கொடுக்க போராடிய சுவிற்ஸர்லாந்து அணி கிடைத்த வாய்ப்புகளை எல்லாம் வீணடித்தது. இறுதியில் செக்குடியரசு அணி 1-0 என்ற கோல் கணக்கில் அசத்தல் வெற்றி பெற்றது.

இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் 'ஏ' பிரிவில் இடம்பெற்றிருந்த போர்த்துக்கல் - துருக்கி அணிகள் மோதின. போர்த்துக்கல் வீரர்களின் அபாரமான தாக்குதல் ஆட்டத்திற்கு ஈடுகொடுத்து விளையாட முடியாமல் துருக்கி வீரர்கள் திணறினார்கள். இறுதியில் போர்த்துக்கல் 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. 2ஆவது பாதி ஆட்டத்தில்தான் இந்த இரண்டு கோல்களும் போடப்பட்டன. பெரி, ரவுல் மெய்ர்எலிஸ் ஆகியோர் இந்தக் கோல்களை அடித்து அணியின் வெற்றிக்கு வித்திட்டனர்.

# நமது முழு சக்தியையும் பயன்படுத்தி ஒபாமாவை ஜனாதிபதி ஆக்குவோம்

### ஹிலாரி உணர்ச்சிபூர்வ உரை

வாஷிங்டன், ஜூன் 09

"நமது போராட்டத்தைத் தொடருவதற்காகவும் நமது இலட்சியங்களை அடைவதற்காகவும் நமது முழு சக்தியையும் பயன்படுத்தி அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாக பராக் ஒபாமாவைத் தேர்ந்தெடுப்போம். ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிடுவதற்கான பிரசாரத்தை இன்றுடன் (நேற்றுமுன்தினம்) நான் முடித்துக் கொள்கிறேன்."

- இவ்வாறு ஜனநாயகக் கட்சியின் வேட்பாளர் தேர்வில் ஒபாமாவிடம் தோற்றுப் போன ஹிலாரி உணர்ச்சிபூர்வ உரையாற்றினார்.

"ஜனநாயகக் கட்சியின் வேட்பாளருக்கான தேர்தலில் ஒபாமாவின் அற்புதமான வெற்றிக்காக அவரை நான் வாழ்த்துகிறேன். ஜனாதிபதிப் பதவிக்கான தேர்தலில் அவரை அங்கீகரித்து அவருக்கு எனது முழு ஆதரவைத் தெரிவித்துக் கொள்கிறேன்." - என்றும் ஹிலாரி கூறினார்.

வாஷிங்டனில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடந்த நன்றி அறிவிப்புக் கூட்டத்தில் திரண்டிருந்த ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களிடையே ஹிலாரி உரையாற்றும்போது மேற்கண்டவாறு கூறியிருந்தார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

"நீங்கள் எனக்கு ஆதரவு அளித்தது போல, என்னோடு இணைந்து அவருக்கு ஆதரவு அளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். ஒபாமாவிடம் வலிமையையும், மன உறுதிப் பாட்டையும், இரக்க சுபாவத்தையும், நெறிமுறைகளையும் நான் கண்டுள்ளேன். தமது சுயவாழ்க்கையில் அவர் அமெரிக்கக் கனவோடு ஒன்றித்து வாழ்ந்தவர். தமது கனவை உத்தரவாதப்படுத்திக் கொள்ள தம்மையே அர்ப்பணித்துக் கொண்டவர்.

"இந்தப் பந்தயத்தை நான் ஆரம்பித்ததும், வெள்ளை மாளிகையை மீண்டும் அடைந்து விடுவேன் என எண்ணினேன். எனினும், நமது நாட்டை மீண்டும் சமாதானம், சுபீட்சம், வளர்ச்சி ஆகியவற்றை நோக்கி இட்டுச் செல்லக்கூடிய ஜனாதிபதியே எமக்குத் தேவை. இதை நாம் உத்தரவாதப் படுத்திக் கொள்ள வேண்டும்.

"2009 ஆம் ஆண்டு, ஜனவரி 20 ஆம் திகதி, வெள்ளை மாளிகை அலுவலகக் கதவுகளுக்கூடாக ஒபாமா நடைபோடுவார். அதை நாம் சரியாக உத்தரவாதப் படுத்திக் கொள்வோம். இது ஒரு கடினமான போராட்டம் என்பதை நான் உணர்வேன்.

"ஜனநாயகக் கட்சி ஒரு குடும்பமாகும். நம்மை ஒன்றாகப் பிணைக்கும் இணைப்புகளை மீள நிலைநாட்டிக் கொள்வதற்கான தருணம் இப்போது வந்து விட்டது. நாங்கள் பகிர்ந்து கொள்ளும் ஆலோசனைகள், எமக்குரிய முக்கியத்துவங்கள், நாம் நேசிக்கும் எமது நாடு ஆகியவற்றிற்காக ஒருங்கிணைவோம்.

"நாங்கள் தனிப்பட்ட பயணங்களை ஆரம்பித்திருக்கலாம். எனினும் இன்று எமது பாதைகள் சங்கமமாகி விட்டன. நாம் அனைவரும் ஒரே இலக்கை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றோம். நவம்பரில் வெற்றிவாகை சூடவும், நாட்டின் தேக்க நிலைப்பாட்டை மாற்றியமைக்கவும் ஐக்கியப்பட்டு விட்டோம்; தயாராகி விட்டோம்.

"அமெரிக்காவின் தரத்தை உலகில் மீள நாம் அனைவரும் நிலைநாட்டுவோம். ஈராக்கிய யுத்தத்துக்கு முடிவு கட்டுவோம். வறுமை முதல் உலக வெப்பத்தை தடுப்பது வரையிலான எதிர்ப்புப் போராட்டங்களை எமது நேசநாடுகளுடன் இணைந்து பகிர்ந்து கொள்வோம்." - என்று தனது உரையில் ஹிலாரி கூறினார்.

# பி.பி.ஸி. ஊடகவியலாளர் திஹிர் சோமாலியாவில் சுட்டுக்கொலை

மொகடிஷ்ஷு, ஜூன் 09

தென் சோமாலிய நகரான கிஸ்மேயோவில், உள்ளூர் ஊடகவியலாளர் நஷ்டிஹு திஹிர் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் பி.பி.ஸிக்கும் ஏ.பி. செய்தி முகவர் நிறுவனத்துக்கும் செய்திச் சேவையாற்றி வந்தவராவார்.

இவர் தமது இல்லத்துக்கு வெளியே, மார்பிலும், வயிற்றிலும் சுட்டுக் கொல்லப்பட்டார். 26 வயதான இவர் கொலை மிரட்டல்களுக்கும் இலக்காகி வந்தார். இப்படு கொலையை சோமாலிய பத்திரிகையாளர்களின் தேசிய ஒன்றியம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

1991 ஆம் ஆண்டு முதல் சோமாலியாவில் அரசியல் கிளர்ச்சிகளும், வன்முறைகளும் நீடித்து வருகின்றன. பெரும்பாலான பகுதிகளில் சட்டமும், ஒழுங்கும் சீர்குலைந்துள்ளனன. நில பிரபுத்துவ வாதிகளின் ஆயுதக் கும்பல்களுக்கிடையே மோதல்கள் இடம் பெற்று வருகின்றன.

இஸ்லாமியத் தீவிரவாத போராளிகள் அரச படைகளுக்கும், அவற்றுக்கு அனுசரணையான எதியோப்பிய படைகளுக்கும் எதிராக ஆயுதப் போராட்டங்கள் நடத்தி வருகிறார்கள். உலகில் ஊடகவியலாளர்களுக்கு ஆபத்தான நாடுகளில் சோமாலியாவும் ஒன்று என கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

2007 ஆம் வருட பெப்ரவரி முதல் சோமாலியாவில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டுள்ளார்கள் என சர்வதேச மனித உரிமைகளுக்கான மன்னிப்புச் சபை அறிவித்துள்ளது.

## அமைதி ஒப்பந்தத்தை உருவாக்கும் முயற்சியில் இஸ்ரேல், பலஸ்தீனம்

ஜெருசலேம், ஜூன் 09

அமைதி உடன்பாட்டை உருவாக்கும் பணியை இஸ்ரேலும் பலஸ்தீனமும் தொடங்கியிருப்பதாக பலஸ்தீனப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அகமது குரேயா கூறியுள்ளார்.

அண்மையில் இஸ்ரேலில் ஊழல் விவகாரம் பூதாகரமாகி, பிரதமர் ஈகுட் எகுட் ஒல்மேட்டின் பதவிக்கே அச்சுறுத்தலை ஏற்படுத்தியது. இதையடுத்தே தமது நிலையை உடனடியாக ஒப்பந்தத்தில் எழுதிக் கொள்ள இஸ்ரேல் அரசு முடிவெடுத்திருப்பதாகத் தெரிகிறது. எனினும் இது குறித்து கருத்துத் தெரிவிக்க இஸ்ரேல் பிரதிநிதிகள் மறுத்துவிட்டனர். உடன்பாட்டில் எந்த விடயம் முதலில் இடம் பெறும் என்பதைத் தெரிவிக்கவில்லை.

## பதவி துறக்கும் திட்டமில்லை

### முஷாரப் பேட்டி

இஸ்லாமாபாத், ஜூன் 09

பதவி துறப்பதற்கும், வெளிநாடு ஒன்றில் அஞ்ஞாதவாசம் இருப்பதற்கும் தன்னிடம் உடனடித் திட்டம் ஏதும் கிடையாது என பாகிஸ்தான் ஜனாதிபதி பர்வேஸ் முஷராப் ஊடகவியலாளர் மத்தியில் குறிப்பிட்டார்.

இது தொடர்பாக ஊடகங்களில் வெளியான தகவல்களை அடுத்து, ஜனாதிபதி இந்த அறிவித்தலை விடுத்தார். "நான் தற்போதைய அரசை ஆதரிக்கின்றேன். இந்த ஆதரவும் நீடிக்கும்" என்றும் அவர் தெரிவித்துக் கொண்டார்.

ஜனாதிபதியின் கூட்டமைப்பு கடந்த பெப்ரவரி தேர்தலில் தோல்விகண்டது முதல் எதிரணியினரும், ஆளும் தரப்பினரும், பதவியிலிருந்து விலகிக் கொள்ளுமாறு அவரை நிர்ப்பந்தித்து வருகின்றனர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "பதவி துறப்புக் கடிதத்தை இப்போது சமர்ப்பிக்கக் கூடிய நிலையில் நான் இல்லை. நான் நிலைமையை உன்னிப்பாக அவதானித்து வருகின்றேன். உதவாத ஒரு மரக்கறியாகிவிட என்னால் முடியாது" - என்றார். அவரது உரை பின்னர் பாகிஸ்தான் தொலைக்காட்சி செய்தியிலும் இடம்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகள் முகாமிற்கு அருகில் துப்பாக்கித் தோட்டாக்கள் வெடிப்பு!

## இரு அகதிகள் படுகாயம்; புலிகளுக்குக்காக பதுக்கிவைக்கப்பட்டனவாம்

சென்னை, ஜூன் 09

கும்மிடிப்பூண்டு அருகே சிப்காட் பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த துப்பாக்கித் தோட்டாக்கள் வெடித்ததில் இலங்கை அகதிகள் இருவர் படுகாயமடைந்தனர்.

இதையடுத்து, பொலிஸார் நடத்திய சோதனையில் அப்பகுதியில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 40 கிலோ துப்பாக்கித் தோட்டாக்கள் கண்டுபிடிக்கப்பட்டு பறிமுதல் செய்யப்பட்டுள்ளன என தமிழக நாளேடுகளில் செய்தி வெளியாகியுள்ளது.

இதுகுறித்து மேலும் வெளியான தகவல்கள் வருமாறு:-

இந்தத் தோட்டாக்கள் அகதிகள் முகாமில் உள்ளவர்களால் விடுதலைப் புலிகளுக்கு விநியோகம் செய்வதற்காக பதுக்கி வைக்கப்பட்டனவா என்பது குறித்து பொலிஸார் தீவிர சோதனை நடத்தி வருகின்றனர்.

கும்மிடிப்பூண்டியை அடுத்த புதுக்கும்மிடிப்பூண்டு சிப்காட் வளாகத்தில் பழைய இரும்புப் பொருள்களை உருக்கும் தொழிற்சாலைகள் உள்ளன. இந்தத் தொழிற்சாலைகள் வெளிநாடுகளிலிருந்து இரும்புக் கழிவுகளை கொன்ரெயினர்கள் மூலம் கப்பல் வழியாக இறக்குமதி செய்து அவற்றை உருக்கி இரும்பைப் பிரித்தெடுக்கும் வேலையில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறு கொன்ரெயினர்கள் மூலம் வரவழைக்கப்பட்ட இரும்புக் கழிவுகளை சிப்காட் வளாகத்தில் உள்ள வீட்டுவசதி வாரியத்திற்கு சொந்தமான இடத்தில் இருக்கும் ஒரு பாழடைந்த கிணற்றுக்கு அருகே குவித்து வைத்துள்ளனர்.

சிப்காட் வளாகத்திற்கு ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் கும்மிடிப்பூண்டி இலங்கைத் தமிழர்கள் அகதி முகாம் உள்ளது. அந்த முகாமிலுள்ள வாலிபர்கள் பலர் இந்தத் தொழிற்சாலைகளில் வேலை பார்த்து வருகின்றனர் எனக் கூறப்படுகின்றது.

அகதி முகாமைச் சேர்ந்த வாலிபர்கள், பாழடைந்த கிணற்றில் குதித்துக் குளிப்பது வழக்கம் என்று கூறப்படுகிறது. இதேபோல நேற்றுமுன்தினம் மாலையும் அகதி முகாமைச் சேர்ந்த 7 பேர் கிணற்றுக்கு குளிக்க வந்திருக்கிறார்கள்.

அதில் யோகேந்திரன் என்ற வாலிபர் சிகரெட்டைப் பற்ற வைத்துவிட்டு தீக்குச்சியை ஓரமாக எறிந்தார் எனக் கூறப்படுகிறது. அந்தத் தீக்குச்சியில் தீ பிடித்து பலத்த சத்தத்துடன் திடீரென ஏதோ ஒரு பொருள் வெடித்துச் சிதறியது. இதில் குளிப்பதற்காக நின்றுகொண்டிருந்த சிறில் என்பவரின் மகன் ஜெய்சன் குரூஸ் (வயது - 15), தர்மலிங்கம் என்பவரின் மகன் நகுலேஸ்வரன் (வயது - 22) ஆகியோர் படுகாயமடைந்தனர்.

வெடித்துச் சிதறிய பொருளிலிருந்து கிளம்பிய இருப்புத் துகள்கள் ஜெய்சன் குரூஸின் வயிற்றில் பாய்ந்தன எனவும் நகுலேஸ்வரனின் இடது தோளில் பாய்ந்தது பலத்த காயம் ஏற்பட்டது எனவும் கூறப்படுகிறது.

இந்த இருவரும் படுகாயங்களுடன் சென்னை அரச பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே இந்த வெடி விபத்துச் சம்பவம் குறித்து தகவல் அறிந்ததும் பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து ஆய்வு நடத்தினார்கள்.

அப்போது கிணற்றைச் சுற்றி மூடைகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது. இதனையடுத்து அந்த மூடைகளைத் தோண்டி எடுத்துப் பார்த்ததில், ஏராளமான துப்பாக்கித் தோட்டாக்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. ஏ.கே. 47, நவீன 3.3. ரக பிஸ்டல், ரீவால்வர் ஆகிய துப்பாக்கிகளுக்கு சேரக்கூடிய தோட்டாக்கள் அவை என்பது தெரியவந்தது.

இந்தத் தோட்டாக்களின் மொத்த எடை 40 கிலோவாகும். இவை அனைத்தும் பறிமுதல் செய்யப்பட்டு சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மேலும் இலங்கை அகதிகள் முகாமில் உள்ளவர்களால் இந்தத் தோட்டாக்கள் விடுதலைப் புலிகளுக்கு விநியோகம் செய்வதற்காகப் பதுக்கி வைக்கப்பட்டனவா என்ற கோணத்திலும் விசாரிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது எனவும், இதற்காக முகாமில் உள்ள 3,670 பேரிடமும் விசாரணை நடத்தப்படும் என்றும் பொலிஸார் கூறினர்.

# வடபகுதி மக்கள் தெற்கே வருவதற்கு தடைவிதிப்பது மனித உரிமை மீறல்

## ஐ.தே.க. செயலாளர் அத்தநாயக்கா

கொழும்பு, ஜூன் 09

"வட பகுதி மக்கள் தென்பகுதிக்கு வருவதற்கு மதவாச்சியில் தடை விதிப்பது அடிப்படை மனித உரிமை மீறலாகும். மதவாச்சியூடான போக்குவரத்துக்குத் தடை விதிப்பதன் மூலம் நாட்டைப் பாதுகாக்க முடியாது."

- ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளரும், எம்.பியுமான திஸ்ஸ அத்தநாயக்க இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மஹிந்த ராஜபக்ஷவின் அரசினாலேயே மக்களின் சுதந்திரமும் உரிமைகளும் பறிக்கப்பட்டுவருகின்றன. சுதந்திரமான போக்குவரத்துக்குத் தடை விதிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று.

நாட்டுக்கும் நாட்டு மக்களுக்கும் பாதுகாப்பு வழங்கவேண்டியது அரசின் முக்கிய கடமையாகும். ஆனால், நாட்டைப் பாதுகாக்க வேண்டிய அரசின் செயற்பாடுகளும் நிர்வாக ஒழுங்குகளும் சீரில்லாத காரணத்தால் பொதுமக்கள் அசாதாரண நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். அத்துடன், நாட்டைப் பாதுகாக்கும் விடயத்தில் அரசிடம் தெளிவான விதிமுறைகளும் - அடிப்படையும் இல்லை. போக்குவரத்துக்கு இடையூறு ஏற்படுத்துவதன் மூலமோ பயங்கரவாதத்திடமிருந்து நாட்டைக் காக்க முடியாது. - என்றார்.

### வடக்கையும் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டம் ஒப்படைத்துவிட்டால் தமிழ் மக்கள் தென்பகுதிக்கு வரவேண்டிய அவசியம் இருக்காது.

எமது மக்கள் நிம்மதியாக வாழ வேண்டுமானால் வடக்கும் கிழக்கும் தமிழர்களுக்குச் சொந்தமாக வேண்டும். அதனைவிட வேறு வழியுமில்லை-என்றார்.

### இலங்கை ஊடக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாநாடு நடைபெறும் வேளை இப்பிரார்த்தனை நிகழ்வுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என சர்வதேச மன்னிப்புச்சபையின் பிரிட்டனுக்கான ஒருங்கிணைப்பாளர் சரத் ஒலிவர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச மன்னிப்புச்சபையின் பிரார்த்தனை நிகழ்வு நடைபெறும் அதே பகுதியில் இலங்கையின் மனித உரிமை மற்றும் சமாதானம் குறித்து அக்கறை கொண்டுள்ள பொது அமைப்புகளின் ஆர்ப்பாட்டமும் இடம்பெறவுள்ளது.

இலங்கையில் மனித உரிமைகளுக்காக குரல் கொடுப்பவர்களுக்கு ஆதரவு தெரிவிக்கவும், அடக்கு முறை மற்றும் நீதியற்ற யுத்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவுமே இந்த ஆர்ப்பாட்டம் இடம்பெறுகின்றது எனத் தெரிவிக்கப்பட்டது. (சி)

நூல் வேனில்
புத்தகத் திருவிழா
கண்காட்சியும், விற்பனையும் நீடிக்கப்பட்டுள்ளது
09, 10, 11, 12, 13 ஆனி 2008
09.30மணி-04.30மணி
நூலகக் கேட்போர் கூடம் யாழ். பல்கலைக்கழகம்
BOOK LAB
கலை வட்டம்
நுண்கலைத்துறை

Special Promotion .......

Pentium 4 Computer
Intel Celeron 1.8 Ghz Processor
MSI DDR11 945 Mother Board
Kingston 512MB Ram
Sata 80GB Hard Disk
Samsung 15" CRT Flat Monitor
ATX Casing
CD Rom
East / Mercury 650W UPS
PS2 Keyboard & Mouse
39,500/=

Pentium 4 Computer
Intel Dual Core 2.0Ghz Processor
Asus P5GC - MX1333 Mother Board
Kingston DDR11 512MB Ram
Sata 80GB Hard Disk
Samsung 17" CRT Flat Monitor
ATX Casing
Samsung DVD R/W Sata
Mercury 650W UPS
PS2 Keybeards & Mouse
Multi Media Speakers
49,500/=

HP Note Book (Lap Top)
Processor Intel Core 2 Duo 2.16Ghz : Screen 15"4' WXGATFT Display :
HDD 120GB : RAM 1GB DDR11 : CD/DVD R/W Double Layer :
Video GMA950 224MB : WIFI 802.11A-G :
One Year International Warranty
89,000/=

Pentium 4 Computer
Intel Pentium 3.0Ghz Processor
Asus P5GC - MX1333 Mother Boards
Kingston DDR11 1GB Ram
Sata 80GB Hard Disk
17" ViewSonic/Samsung Monitor
ATX Casing
Sony DVD R/W
Power Tree 650W UPS
PS2 Keyboards & Mouse
Dust Cover
50,500/=

Pentium 4 Computer
Intel Pentium 2.0Ghz Dual Core Processor
Asus P5GC - MX1333 Mother Board
Kingston DDR11 1GB Ram
Sata 160GB Hard Disk
15" View Sonic Monitor
ATX Casing
Sony DVD R/W
Power Tree 650W UPS
PS2 Keyboard & Mouse
Duest Cover
51,000/=

Pentium 4 Computer
Intel Pentium 3.4Ghz Processor
GigaByte 945 intel / Foxconn Mother Board
Sata 80GB Hard Disk
Kingston DDR11 1GB Ram
15" LCD Monitor
ATX Handle Casing
Asus / HP DVD R/W
Power Tree 650W UPS
USB Keyboard & Optical Mouse
Mouse Pad
59,000/=

Pentium 4 Computer
Intel Pentium 2.4Ghz Dual Core Processor
Intel 945GCNL Original Mother Board
Sata 160GB Hard Disk
Kingston DDR11 1GB Ram
17" View Sonic Wide Screen LCD Monitor
ATX Handle Casing
Sony DVD R/W
Power Tree 650W UPS
USB Keyboard & Optical Mouse
Mouse Pad
69,500/=

MUSIC WORLD & COMPUTERS
141 ... 021 222 6554.
(ஞாயிறு, விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்)

### ஐரோப்பிய ஒன்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தூதர்களே இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளனர்.

இலங்கைக்கான விஜயத்தின் போது இவர்கள் அரச பிரதிநிதிகளையும் அரச சார்பற்ற அமைப்புகளைச் சேர்ந்தோரையும் சந்திக்கவுள்ளனர். இதேநேரம் மனித உரிமை ஆர்வலர்களின் நிலை உட்படப் பல விடயங்கள் குறித்து ஆராயவுள்ளனர். இலங்கையின் மனித உரிமை நிலைவரம் குறித்து சுயாதீன தரப்புகளிடமிருந்து இவர்கள் தகவல்களைப் பெறவுள்ளனர்.

குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்தின் கூட்டு மனித உரிமைத் தூதர்கள், இலங்கை தனது கடப்பாடுகளை நிறைவேற்ற வேண்டும் என்றும் ஜி.எஸ்.பி. வரிச்சலுகை அதற்குக் கிடைப்பதற்கு இது மிகவும் அவசியமென வலியுறுத்துவர்.

இக்குழுவினரின் விஜயத்தின் பின்னர் ஐரோப்பிய ஒன்றியத்தின் மற்றுமொரு குழுவினரும் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இலங்கை ஏற்றுக்கொண்டு கைச்சாத்திட்டுள்ள 27 சர்வதேச பிரகடனங்களின் அடிப்படையில் அதற்கு உள்ள கடப்பாடுகளை அது நிறைவேற்ற வேண்டியது அவசியமென ஐரோப்பிய ஒன்றிய வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

குறிப்பிட்ட பிரகடனங்களை நடைமுறைப்படுத்துவதற்காக இலங்கை உள்ளூர் சட்டங்களை உருவாக்கியுள்ளதா? அமுல்படுத்துகின்றதா? மனித உரிமை மீறல்கள் எவ்வாறு உள்ளன? என்பவை குறித்தும் கருத்தில் கொள்ளப்படும்.

இலங்கை அரசு இவற்றை நிறைவேற்றி இருந்தால் ஜி.எஸ்.பி. வரிச் சலுகை கிட்டும். இல்லாவிடில் கிடைக்காது என அந்த வட்டாரங்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

### மொற ருவ ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தில் கொண்டு அவர்களை இரண்டு, மூன்று தினங்கள் கழித்து வருமாறு விரிவுரையாளர்கள் பணித்திருந்தனர் என்று அந்தத் தகவல்கள் மேலும் தெரிவித்திருக்கின்றன.

இதற்கிடையில் தமிழ் மாணவர்கள் பல்கலை விரிவுரைகளில் கலந்துகொள்ளும் நேரத்தில் அவர்களுக்கான பாதுகாப்பு பல்கலை வளாகத்துக்குள் மாத்திரமே வழங்கப்படும் என்றும், இதனால் அவர்கள் கண்டபடி வெளியே நடமாடித்திரிவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் என்றும் விரிவுரையாளர்கள் அறிவுரை வழங்கினர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மாணர்களில் குண்டுவெடிப்புச் சம்பவத்தை அடுத்துக்கைதுசெய்யப்பட்ட 36தமிழ் மாணவர்களைத் தவிர மற்றையவர்கள் பாதுகாப்புக் கருதி வவுனியாவுக்கு அழைத்துச் செல்லப்பட்டமை தெரிந்ததே. (அ-சி)

### வெலி ஓயாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மான ஐந்து நிலையங்களை மீட்டுள்ளனர்.

பீரங்கிப்படை, மோட்டார் குண்டுத் தாக்குதலுடன் படையினர் முன்னேறிக் கொண்டிருக்கின்றனர். அந்த பிராந்தியத்தில் கடும் மோதல் இடம் பெறுகின்றது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மோதலில் 17புலிகளும் 6படையினரும் கொல்லப்பட்டனர் என்றும் 35 புலிகளும் 18படையினரும் காயமடைந்துள்ளனர் என்றும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதயநாணயக்கார கூறினார்.

இந்த மோதல்கள் குறித்து விடுதலைப் புலிகள் தரப்புடன் தொடர்பு கொள்ள முடியவில்லை என்று ஏஜென்சி செய்திகள் தெரிவித்தன. (அ-01)

### ஆசிரியர்கள் ...

(முத்லாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்த்து வைக்குமாறு நாம் தொடர்ச்சியாக அரசுக்கு வேண்டுகோள் விடுத்து வருகின்ற போதிலும் அரசு அது தொடர்பாக இன்னும் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்லும் வாழ்க்கைச் செலவீனத்தால் ஆசிரியர்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். எமது பிரச்சினையை அரசு இன்னும் கவனத்தில் எடுக்கவில்லை.

சம்பள முரண்பாடு தொடர்பாக (நாளை) செவ்வாய்க்கிழமை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கவுடன் நாம் பேச்சு நடத்தவுள்ளோம். இச்சந்திப்பு மூலம் எமது பிரச்சினைக்கு உடன் தீர்வு கிடைக்கும் என்று நாம் நம்பவில்லை.

இதன் காரணமாகவே நாம் 11ஆம் மற்றும் 12ஆம் திகதிகளில் நாடளாவிய ரீதியில் சுகவீன விடுமுறைப் போராட்டத்தை நடத்தத் திட்டமிட்டுள்ளோம். - என்றார். (சி)

### துணை இராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பிரச்சனைக்குத் தீர்வு காணுமாறு கேட்டிருந்தது.

துணை இராணுவக் குழுக்களை நிராயுதபாணிகளுக்குமாறும் ஆன்மீகத் தலைவர்களின் ஒன்றியம் அரசிடம் வேண்டுகோள் விடுத்திருந்தது.

இதற்குப் பதிலளித்தே மனித உரிமைகள் அமைச்சின் புதிய செயலாளர் அரசின் நிலைப்பாட்டை வெளிப்படுத்தி உள்ளார்.

ஆன்மீகத் தலைவர் ஒன்றியத்தினர் வடக்கு, கிழக்கில் இயங்கும் இராணுவத் துணைக்குழுக்களை நிராயுதபாணிகளாக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கிறார்கள்.

இதே கோரிக்கை விடுதலைப் புலிகளிடமும் விடுக்கப்பட்டிருக்கிறதா என்பது குறித்து தெளிவில்லை. விடுதலைப் புலிகளே ஏனைய தமிழ் குழுக்கள் எல்லாவற்றையும் அழித் தொழித்த தலை சிறந்த இராணுவத் துணைக்குழுவாகும்.-

விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் செயற்பட்ட தமிழர்களுக்கு அரசாங்கம் ஒரு போதும் துரோகம் நினைக்கமாட்டாது. அவர்களை விடுதலைப் புலிகளுக்கு இரையாக்க இடம் தரமாட்டாது.-

பெயர் பெற்ற கத்தோலிக்க இயக்கமான ஜரிஸ் குடியரசு இராணுவம் இறுதிக்கட்டத்தில் ஆயுதங்களை களைந்து விட்டு சமாதானப் பேச்சுக்கு முன் வந்து வெற்றியும் கண்டது. அவ்வாறு செய்யுமாறு ஆன்மீகத் தலைவர்களின் ஒன்றியம், விடுதலைப் புலிகளிடம் கேட்டுக் கொள்ள வேண்டும் - என்றும் ராஜீவ்விஜேயசிங்கா தெரிவித்துள்ளார்.

இப்போது அரசாங்க சமாதானச் செயலகத்தில் செயலாளர் நாயகமாக விளங்கும் பேராசிரியர் ராஜீவ்விஜேசிங்க, அந்தப் பதவியுடன் மனித உரிமை அமைச்சின் செயலாளராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் அந்தப் பதவியை இன்று உத்தி யோக பூர்வமாக ஏற்றுக் கொள்கிறார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09.06.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.